
# கவிஞர் கதை

கி.வா.ஜகந்நாதன்



கலைமகள் வெளியீடு...

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# கவிஞர் கதை

# ஔவைப் பாட்டி

ஔவைப் பாட்டி என்று சொன்னாலே ஒரு கிழ உருவம் உங்கள் மனக்கண்முன் தோன்றும். தமிழிலே அந்தப் பாட்டி பாடிய பாட்டுக்கள் பல உண்டு. நீங்கள் பள்ளிக்கூடத்தில் வாசிக்கிற ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி இவையெல்லாம் அந்தப் பாட்டி பாடியவைகளே. ஆனால் அந்தப் பாட்டிக்கு முன்பே மற்றோர் ஔவை இருந்தாள். அவளும் புலமை நிரம்பியவள்தான்; இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் இருந்தவள், மகா கெட்டிக்காரி. பெரிய பெரிய மன்னர்களெல்லாம் அந்த ஔவையிடம் மதிப்பு வைத்திருந்தார்கள்.

அதிகமான் என்ற அரசன் ஒருவன் இருந்தான். அவன் தகடூர் என்ற ஊரில் இருந்து அரசாண்டுவந்தான். இப்போது சேலம் மாவட்டத்தில் தர்மபுரி என்ற ஊர் இருக்கிறது. அதைத்தான் அந்தக் காலத்தில் தகடூர் என்று சொல்லிவந்தார்கள். அதிகமான் புலவர்களிடம் மிகவும் பணிவுடன் நடந்துகொள்வான்; அவர்கள் பாட்டைக் கேட்டுக் களிப்பு அடைவான்; பரிசுகள் கொடுப்பான்.

ஒரு நாள் ஔவை அதிகமானிடம் வந்தாள். அப்போது அதிகமான் ஒரு நெல்லிக்கனியைக் கையில் வைத்துக்கொண்டிருந்தான். அந்தக் கனியைத் தின்றால் உடம்புக்கு அதிகமான பலம் உண்டாகும்; வியாதி ஒன்றும் வராது; பல ஆண்டுகள் வாழலாம். மிகவும் அருமையாகச் சம்பாதித்தது அது. அது அதிகமான் கைக்கு எட்டியது. ஆனால் ஔவை வந்தவுடன் அவன் அதை அந்தப் பெருமாட்டியிடம் கொடுத்தான். அவளுக்கு அதன் பெருமை தெரியாது. ஆதலால் அதை உடனே வாயில் போட்டுத் தின்றுவிட்டாள்.

பிறகு அங்கிருந்தவர்களின்மூலம் அவள் அதன் அருமையையும் பெருமையையும் உணர்ந்தாள். "அடடா! இந்த விஷயம் முன்பே

தெரிந்திருந்தால் நான் வாங்கிக்கொண் டிருக்க மாட்டேனே. அரசன் வாழ்ந்தால் எல்லோருக்கும் நல்லது. நான் கிழவி; நான் வாழ்ந்து என்ன செய்யப் போகிறேன்!'' என்று வருந்தினாள்.


அதிகமானோ, "நான் ஒரு நாட்டுக்கு அரசன். நீங்களோ தமிழ்நாடு முழுவதும் செல்வாக்கு உள்ளவர்கள். நீங்கள் எவ்வளவு காலம் வாழ்கிறீர்களோ, அவ்வளவு காலம் உங்களுடைய கவியினால் தமிழ் மக்களுக்கு நன்மை உண்டாகும்'' என்று சொன்னான்.

"இந்த உபகாரத்தைச் செய்த நீ, நஞ்சை உண்டும் இறவாமல் வாழும் சிவபெருமானைப்போல நீடு வாழ்வாயாக!'' என்று வாழ்த்தினாள் ஔவை. அதுமுதல் அதிகமானிடம் ஔவை மிக்க மதிப்புடையவளாக இருந்தாள். அவனைப் பாராட்டிப் பல பாடல்கள் பாடினாள்.

காஞ்சீபுரத்தில் ஒரு தொண்டைமான் வாழ்ந்திருந்தான். அவனைப் போய்ப் பார்த்து வரும்படியாக அதிகமான் சொன்னான். அப்படியே ஔவை தொண்டைமானிடம் சென்றாள். அந்தப் புலமை மிக்க பெண்மணியைக் கண்டு, தொண்டைமான் வரவேற்று உபசரித்தான். தன் அரண்மனையெல்லாம் கொண்டு போய்க் காட்டினான். படைகள் வைத்திருக்கிற ஆயுதசாலையையும் காட்டினான். அதைப் பார்த்தபோது ஔவைக்கு அதிகமானுடைய வீரம் நினைவுக்கு வந்தது.

தொண்டைமான் பலவகை உபசாரம் செய்துவிட்டு, "தங்கள் வாக்கால் ஏதாவது சொல்லவேண்டும்'' என்றான். அரசர்கள் புலவர்களிடம் பாட்டுப் பெறுவதற்கு ஆசைப்படுவார்கள். தொண்டைமானுடைய பெருமையை அதற்கு முன் ஔவை கேட்டதில்லை. போரில் வெற்றி பெற்றிருந்தாலும் அவனைப் பற்றித் தெரிந்திருக்கும். அப்படி எந்தப் போரிலும் அவன் கலந்துகொண்டதாகவும் தெரியவில்லை.

தொண்டைமானோ கவி பாடும்படி கேட்டுவிட்டான். அதிகமான் சொன்னதனால்தான் அவள் அங்கே வந்தாள். அந்த மரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் அல்லவா? ஆதலால் ஒரு பாட்டுப் பாடிவிடலாம் என்று நினைத்தாள். பாட்டும் பாடிவிட்டாள். ஆனால் பாட்டு அந்தத் தொண்டைமானைப் பாராட்டியதாக இருக்கவில்லை; அதிகமானைப் பாராட்டின பாட்டாக இருந்தது. அதில் என்ன சொல்லியிருந்தாள் தெரியுமா?



"அடடா! இந்த ஆயுதங்கள் எவ்வளவு அழகாகப் பளபளப்பாக இருக்கின்றன! மயிற்பீலியைச் சூட்டி அலங்கரித்திருக்கிறார்கள். காம்புகளெல்லாம், பண்ணின காலத்தில் இருந்த மாதிரியே இருக்கின்றன. கொஞ்சமாவது மூளியாகவேண்டுமே! இவ்வளவு பாதுகாப்பான இடத்தில் இவற்றை நீ பத்திரமாக வைத்திருக்கிறாய். அதிகமான் ஆயுதக் கொட்டிலில் ஆயுதம் ஒன்றுகூட இல்லை. எல்லாம் கொல்லன் பட்டறையில் கிடக்கின்றன. ஒன்றாவது உருப்படியாக இருக்கவேண்டுமே! அவன் வேல், பகைவர்களைக் குத்தி நுனி சிதைந்துபோய், உடைந்து கிடக்கின்றது" என்று பாடினாள். தொண்டைமானுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. 'அதிகமானைத் தாழ்த்தி, நம்மை உயர்த்திப் பாடியிருக்கிறாள்' என்று அவனுக்கு ஆனந்தம்.

ஆனால் ஔவை சொன்னதில் யாருடைய புகழ் வெளியாகிறது என்பது உங்களுக்குத் தெரிகிறது அல்லவா?

# பிசிர் ஆந்தையார்

பிசிர் ஆந்தையார் என்ற பெயரைக் கேட்டாலே வேடிக்கையாக இருக்கிறது அல்லவா? பிசிர் என்பது ஓர் ஊர்; பாண்டி நாட்டில் உள்ளது. ஆந்தையார் அந்த ஊரில் இருந்த புலவர். நன்ருகப் படித்தவர்; அருமையான கவிஞர்; மிகவும் தங்கமான குணம் உடையவர். அவர் எவ்வளவு நல்லவரோ அவ்வளவு நல்லவர்கள் அவர் வீட்டில் இருக்கிற எல்லோரும்.

அப்போது மதுரையில் ஒரு பாண்டியன் ஆட்சி புரிந்து வந்தான். அவனுக்கு அறிவுடை நம்பி என்று பேர். அரண்மனைச் செலவு அதிகம் ஆகிவிட்டது என்று அவன் வரி அதிகமாகப் போட்டுவிட்டான், அதனால் மக்களுக்குத் துன்பம் உண்டாயிற்று. அரசனிடம் போய்த் தங்கள் கஷ்டத்தைச் சொன்னல் கேட்பானே கேட்கமாட்டானே என்ற பயம் அவர்களுக்கு இருந்தது. பயப்பட்டால் நடக்குமா? வரிப் பாரம் அவர்களை அழுத்தியது. அரசர்கள் எவ்வளவுதான் அதிகாரம் உடையவர்கள் ஆனுலும், புலவர்களுடைய அறிவுக்கு மதிப்புக் கொடுத்து அவர்கள் சொல்வதைக் கேட்பார்கள். புவியரசரைவிடக் கவியரசருக்கு அந்தக் காலத்தில் மதிப்பு அதிகம்.

பிசிர் ஆந்தையாரிடம் போய்க் குடிமக்கள் தங்களுடைய குறையைச் சொல்லிக்கொண்டார்கள். அவர், "நான் அரசனைப் பார்த்து என்னல் இயன்றதைச் செய்கிறேன்" என்று சொல்லி அவர்களை அனுப்பினர். பிறகு மதுரைக்கு வந்து பாண்டியன் அறிவுடை நம்பியை நாடிச் சென்ருர்.

அவரைக் கண்டவுடன் பாண்டிய மன்னன் வரவேற்று உபசாரங்கள் செய்தான். உயர்ந்த இடத்தில் அமரச் செய்து பேசிக்கொண்டிருந்தான். பேச்சுக்கு நடுவிலே கவிஞர், மெல்ல யானையைப்பற்றிப் பேசும் சந்தர்ப்பத்தை உண்டாக்கிக்கொண்டார்.

"ஒருவன் யானை ஒன்றை வைத்திருந்தான். அவனுக்குச் சின்ன வயல் ஒன்றும் இருந்தது. அந்த வயல் விளைந்து வந்ததும் நெல்லைச் சேமித்து வைத்தான். தான் சோறு சாப்பிட்டாலும் சாப்பிடாவிட்டாலும் யானைக்குக் கவளம் கொடுப்பதை மறக்கமாட்டான். அந்த வயலில் விளைந்த நெல், யானைக்கும் அவன்

குடும்பத்துக்கும் போதுமானதாக இருந்தது. ஒரு நாள் அந்த வயலுக்கு ஆபத்து வந்துவிட்டது.''

''என்ன ஆபத்து?'' என்று பாண்டியன் கேட்டான்.

''யானையினாலே வந்த ஆபத்து.''

''பழகின யானை தானே?''

''ஆமாம், பழகின யானைதான். அதற்கு என்னவோ ஒரு நாள் உற்சாகம் உண்டாகிவிட்டது. வயலில் விளையும் நெல்லை அறுத்து வந்து, சோறாக்கி, ஆண்டு முழுதும் கொடுத்து வந்தது பிடிக்கவில்லைபோல் இருக்கிறது! நேரே வயலிலே புகுந்து விட்டது.''

''அப்புறம்?''

''அப்புறம் என்ன?''

''ஒரே குழப்பந்தான். வயல் முழுவதையும் அழித்துவிட்டது. அதுவாவது வயலில் இருந்த பயிர் முழுவதையும் தின்றதா? இல்லை, இல்லை. அதன் வாய்க்குள் போனதைவிடக் காலால் துகைபட்டு அழிந்தது அதிகம்.''

''அந்த யானைக்காரன் என்ன ஆனான்?''

''அதை மறுநாளே விற்றிருப்பான். அவனைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. யானையாவது விலங்கினம். அறிவுடையவர்கள் அந்த யானையைப்போல் நடந்துகொண்டால் எவ்வளவு துன்பம் உண்டாகும் என்பதை எண்ணிப் பார்க்கிறேன்.''

''நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே!'' என்று கேட்டான் அரசன்.

''அரசர்கள் யானைக்குச் சமானமானவர்கள். குடிமக்கள் வயலைப் போன்றவர்கள். அளவு தெரிந்து வரி வாங்கினால் குடிமக்களுக்கும் நல்லது; அரசர்களுக்கும் நல்லது. அளவுக்கு மிஞ்சிக் குடிகளிடம் வரி தண்டுவதாக இருந்தால், யானை புகுந்த வயல் போலத்தான் நாடு ஆகிவிடும்.''


அவர் இதைச் சொன்னபோது அரசனுக்குச் சொரேர் என்றது. கவிஞர் தன்னை நினைத்துத்தான் சொல்கிறாரென்பதை உணர்ந்துகொண்டான். புலவர் மறுபடியும் பேசலானார். ''அரசன் நல்லவனாக இருந்தாலும் உடன் இருக்கும் மந்திரிகள் அவனைக் கெடுத்துவிடுகிறார்கள். வரி போடலாமா என்று அரசன் கேட்டால் தாராளமாகப் போடலாம் என்று தலையாட்டுகிறார்கள். குடிகள், அந்த அரசனை அண்டுவதற்குப் பயப்படுகிறார்கள்'' என்று சொல்லி நிறுத்தினார்.

பாண்டியன் தான் செய்த பிழையை உணர்ந்துகொண்டான். புதிதாகப் போட்ட வரியை நீக்கிவிட்டான்.

புலவருடைய புகழ் தமிழ் நாடெங்கும் பரவியது. சோழ நாட்டில் உறையூரில் கோப்பெருஞ் சோழன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனுக்குத் தமிழ்ப் புலவர்களிடம் அளவு கடந்த அன்பு. பிசிராந்தையாரைப்பற்றி அவன் கேள்வியுற்ருன். அவரிடம் அவனுக்கு அன்பு உண்டாயிற்று. மதுரைப் பக்கத்திலிருந்து யார் வந்தாலும் பிசிராந்தையாரைப் பற்றி விசாரிப்பான். மதுரைக்குப் போகிறவர்கள் மூலம் அந்தக் கவிஞரிடம் கொடுக்கும்படி பரிசுகளைக் கொடுத்தனுப்புவான். பிசிராந்தையாருக்கும் கோப்பெருஞ் சோழனிடம் பேரன்பு உண்டாயிற்று. அவனைப்பற்றிய விவரமெல்லாம் அவர் தெரிந்துகொண்டார்.



இந்த இரண்டு பேரையும் தெரிந்துகொண்ட புலவர்களும் மற்றவர்களும் அவர்களிடம் ஏற்பட்டிருக்கும் ஆழ்ந்த நட்பைக் கண்டு வியப்படைந்தார்கள், 'ஒருவரை ஒருவர் பார்க்கவில்லை. ஆனாலும் எவ்வளவு சிறந்த நண்பர்களாக இருக்கிருர்கள்! நட்புக்கு உள்ளந்தான்



காரணம்போல் இருக்கிறது?' என்று பேசிக்கொண்டார்கள்.

பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழனைப் புகழ்ந்து கவிதை எழுதி அனுப்புவார். அதைப் பார்த்துப் பார்த்து ஆனந்தக் கூத்தாடுவான் சோழ அரசன். ஒரு நாள் அவர் வானத்தில் ஓர் அன்னப்பறவை பறப்பதைப் பார்த்தார். அது அன்னமோ வேறு பறவையோ நிச்சயம் இல்லை. ஆனாலும் அவருக்கு அது அன்னம்போலத் தோன்றியது. இமயமலையில் மானசசரஸ் என்ற பெரிய ஏரி இருக்கிறது. அங்கே அன்னங்கள் வாழும். அன்னம் தமிழ் நாட்டில் தென்கோடியில் உள்ள கன்யாகுமரிக்குச் சென்று, அங்குள்ள மீனை உண்டுவிட்டு, இமய மலைக்குப் பறந்து செல்வதாகக் கவிஞர் எண்ணினார். அதைப் பார்த்து ஒரு பாட்டுப் பாடினார். 'ஏ ஆண் அன்னமே! நீ குமரி மீனை உண்டு இமய மலைக்குத் தானே போகிறாய்? போகிற வழியில் சோழ நாடு இருக்கிறது. அதில் உள்ள உறையூர் வழியே போனால் கோப்பெருஞ் சோழனுடைய அரண்மனையைக் காண்பாய். அங்கே மெதுவாக உள்ளே போய் அவனைப் பார். நான் பிசிராந்தையாருக்கு வேண்டியவன் என்று ஒரு வார்த்தை சொன்னால் போதும்; உடனே அவன் உனக்கு வேண்டியதைக் கொடுத்து உன் பேடைக்கு நல்ல ஆபரணங்களைக் கொடுப்பான்' என்று ஓர் அழகான பாட்டைப் பாடினார். அன்னம் போயிற்றோ என்னவோ? அந்தப் பாட்டுச் சோழ மன்னனிடம் போயிற்று. அடடா! அதைப் பார்த்து அவனுக்கு உண்டான ஆனந்தத்தை என்னவென்று சொல்வது!

சோழன், 'இனிமேல் நமக்கு ஆட்சி வேண்டாம்' என்று உலக வாழ்வை வெறுத்துத் துறவி ஆனான். அப்போதும் பிசிராந்தையாருடைய நட்பை மறக்கவில்லை. அவனுடைய உடம்பு மெலிந்து மரணதசை உண்டாயிற்று. ஒரு முறையாவது பிசிராந்தையாரைக் கண்ட பிறகு உயிர் விட வேண்டும் என்ற ஆசை அவனுக்கு இருந்தது. அவர் நிச்சயமாக வருவார் என்ற நம்பிக்கையும் தோன்றியது. உடன் இருந்தவர்களிடம், "பிசிராந்தையாரைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை மாத்திரம் எனக்கு இருக்கிறது. எங்க

ளிடையே உள்ள நட்பு உத்தம நட்பானால் அவர் நிச்சயமாக வருவார்'' என்று சொன்னான். சோழன் உடம்பு சரி இல்லாமல் இருக்கிறான் என்ற செய்தி பிசிராந்தையாருக்குத் தெரியாது. ஆனாலும் அவர் மனசில் ஏதோ ஒன்று, அவரை உந்தியது. உண்மையான அன்பு இருந்தால் இப்படி நேரும். சோழனைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை மிகுதியாயிற்று. அவர் புறப்பட்டு விட்டார்.

பிசிராந்தையார் உறையூர் வந்து சேர்ந்தார். மாளிகையை விட்டுத் தவச்சாலையில் உயிர் விடுந் தறுவாயில் இருந்த கோப் பெருஞ் சோழனைக் கண்டார். அவர் வரவைக் கண்ட எல்லாரும் வியப்பில் ஆழ்ந்தனர். "என்ன ஆச்சரியமான நட்பு! ஒருவரை ஒருவர் பார்த்ததே இல்லை. அரசன் அவர் வருவார் என்று சொன்னான். அவருக்குச் செய்தி சொல்லுவார் யாரும் இல்லை. அப்படியிருந்தும் இவன் சொன்னதுபோலவே கவிஞர் வந்துவிட்டாரே! இரண்டு பேருடைய மனசும் அப்படி ஒத்திருக்கின்றன!'' என்று பேசிக்கொண்டார்கள். அன்புக்கு எத்தனை ஆற்றல் இருக்கிறதென்பதை எண்ணி வியந்தார்கள்.

பிசிராந்தையாரைப்பற்றி அவர்கள் பல காலமாகக் கேள்விப் பட்டிருந்தார்கள். அவர் தலை நரைத்த கிழவராக இருப்பார் என்று எண்ணியிருந்தார்கள். ஆனால் அக்கவிஞர் தலையில் ஒரு நரைமயிர் இல்லை. அதுவேறு அவர்களுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது. "புலவர் பெருமானே! உங்களைப்பற்றிப் பல வருஷங்களாக நாங்கள் கேள்விப்படுகிறோம். உங்களுக்கு நிரம்ப வயசாகி இருக்கவேண்டுமே! ஆனாலும் தலை நரைக்கவில்லையே! என்ன மருந்து சாப்பிட்டீர்கள்?'' என்று கேட்டார்கள். அவர் என்ன சொன்னார் தெரியுமா?

"எப்படி நரைக்காமல் இருக்கிறதென்று கேட்கிறீர்கள்? எனக்குக் கவலையே இல்லை. என் மனைவி எனக்கு வேண்டியதைச் செய்யும் குணம் படைத்தவள். என் மக்கள் அறிவும் அடக்கமும் உடையவர்கள். என் வேலைக்காரர்கள் என் குறிப்பறிந்து வேலை செய்வார்கள். அரசன் செங்கோலாட்சி செய்கிறான். நான் வாழும் ஊரில் நல்லவர்கள் பலர் இருக்கிறார்கள். அதனால் நான் கவலையில்லாமல் வாழ்கிறேன். நரைக்காமல் இருப்பதற்கு இதுதான் காரணம்'' என்றார்.

நெடுநாளாகக் காணமல் மனத்தால் ஒன்றுபட்ட நண்பர்கள் கூடினார்கள். சோழன் அவரிடம் கடைசி விடையைப் பெற்றுக்

கொண்டான்; உலக வாழ்வை நீத்தான். 'நீ முன்னே போ; நான் பின்னே வருகிறேன்'' என்று புலவர் சொன்னார். உடம்பு இரண்டு, உயிர் ஒன்று என்று சொல்லும்படியாக இருந்தது அவர்களுடைய நட்பு. தம் நண்பன் இறந்ததைக் கண்ட புலவர், அவன் இல்லாத உலகத்தில் வாழ விரும்பவில்லை. விரதமிருந்து உயிர் நீத்தார். அதைக் கண்டு மூன்றாவது முறையாகப் புலவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். 'நட்பென்றால் இதுவல்லவா உத்தமமான நட்பு!' என்று மக்கள் எல்லோரும் பாராட்டி வாழ்த்தினார்கள்.

# கபிலர்

இராமநாதபுரம் மாவட்டத்தில் பிரான் மலை என்று ஒரு மலை இருக்கிறது. அதற்கு மிகப் பழைய காலத்தில் பறம்பு மலை என்று பேர். அங்கே பாரி என்ற சிற்றரசன் ஒருவன் ஆண்டு வந்தான். இப்போது ஜமீன்தார் என்று சொல்லுகிறோமே, அவர்களைப் போன்றவர்களே அந்தச் சிற்றரசர்கள். அந்தக் காலத்தில் அவர்களை வேளிர் என்று சொல்வார்கள். மகள் என்றால் ஒருத்தியையும் மகளிர் என்றால் பலரையும் குறிக்கும் என்று உங்களுக்குத் தெரியும் அல்லவா? அந்த மாதிரியான பெயர்களே வேள், வேளிர் என்பவையும்.

பாரி வேளுடைய நாட்டுக்குப் பறம்பு நாடு என்று பேர். அந்த நாட்டில் முந்நூறு ஊர்கள் இருந்தன. பறம்பு மலை நல்ல வளப்பமுடைய மலை. அடர்ந்த காடுகளை உடையது. பாரியினுடைய பெருமைக்கு அவன் நாடு காரணம் அன்று. அவன் தன்னிடம் வருகிறவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் கொடுக்கிறவன். அந்தப் பழங்காலத்தில் தமிழ்நாடு முழுவதும் அறிந்த கொடையாளிகள் சிலர் இருந்தார்கள். அவர்களை வள்ளல் என்று சொல்வார்கள். ஏழு வள்ளல்களைப்பற்றிப் புலவர்கள் பாராட்டிக் கவி பாடியிருக்கிறார்கள். அந்த ஏழு பேருக்குள் பாரியும் ஒருவன்.

பாரி வேளின் புகழ் பரவியதற்கு அவனுடைய அரசாங்கப் புலவராகக் கபிலர் என்ற பெரியவர் இருந்தது முக்கிய காரணம். புலவர்கள் யாவரும் ஒருங்கே போற்றும் பெருமை கபிலருக்கு இருந்தது. பெரிய அறிவாளி; கல்விக் கடல்; அற்புதமான கவிஞர்; குணமலை. அவர், மதுரை, உறையூர் முதலிய இடங்களில் பாண்டியனிடமோ சோழனிடமோ புலவராக இருந்திருக்கலாம். அவருக்குப் பாரி வேளிடம் அளவற்ற அன்பு உண்டாகிவிட்டது. அதனால் பறம்புமலையில் பாரியின் அவைக்களப் புலவராகவே இருந்துவிட்டனர். பாரியும் கபிலரும் உடல் இரண்டு, உயிர் ஒன்றாகப் பழகினார்கள்.

பாரிக்கு அங்கவை, சங்கவை என்று இரண்டு பெண்கள் இருந்தார்கள். நல்ல குணமும் அழகும் உள்ளவர்கள். அவர்களுக்குத் தமிழ் சொல்லிக் கொடுத்து, இனிய கவிகளைப் பாடும்

படி செய்தார் கபிலர். தமிழில் ஆர்வம் உடையவர்கள் யாராக இருந்தாலும் கபிலரைக் கண்டு வணங்கிவிட்டுச் செல்வார்கள்.



ஒரு சமயம் பாண்டியனுக்குப் பாரி மகளிரைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. ஒரு தூதுவனை அனுப்பினான். பாரி, கபிலருடைய யோசனையைக் கேட்டான். "அரசருடைய அந்தப்புரத்தில் பல அரசிகளோடு ஒருத்தியாக வாழ்வதனால் பயன் இல்லை" என்று அவர் கூறினார். பாரிக்கும் அது சரியென்றே பட்டது. என் பெண்களைக் கொடுக்க மாட்டேன் என்று மறுத்துச் சொல்லிவிட்டான். அதைக் கேட்டுப் பாண்டியனுக்குப் பாரியின்மேல் கோபம் உண்டாயிற்று.

சில நாள் கழித்துச் சோழனுக்கும் பாரி மகளிரின்மேல் விருப்பம் உண்டாயிற்று. அவனும் பாரியினிடம் ஆளை அனுப்ப, அவனுக்கும் பாரி மறுத்துக் கூறிவிட்டான். இப்படியே சேரனும் பாரி மகளிரைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்பினபோது, அவனுக்கும் மறுத்துச் சொல்லியனுப்பினான் பாரி.

இப்போது சேர சோழ பாண்டியர் என்ற மூன்று பெரிய அரசர்களுக்கும் பாரியின்மேல் கோபம் வந்துவிட்டது. மூன்று பேர்களும் ஒன்றாகக் கலந்து பேசிக்கொண்டார்கள். "இந்தச் சின்ன அரசனுக்கு என்ன திமிர்! இவனை அடக்கிவிட வேண்டும்" என்று தீர்மானித்தார்கள்.

மூன்று பேர்களுடைய படையும், பறம்பு மலையைச் சூழ்ந்து கொண்டன. மேலே கோட்டையை அடைத்துக்கொண்டு பாரி உள்ளே இருந்தான். 'மலையைச் சுற்றிக் காவல் வைத்துவிட்டால் கீழே இருந்து மேலே ஒன்றும் செல்ல முடியாது. சோற்றுக்கு இல்லாமல் பாரியும் அவனைச் சேர்ந்தவர்களும் வாடிக் கடைசியில் வழிக்கு வருவார்கள்' என்று மூன்று அரசர்களும் எண்ணிப் படைகளைக் கீழே நிறுத்தியிருந்தார்கள். ஆனால் விசாலமான பறம்பு மலையில் பாரியின் ஆட்களுக்கு வேண்டிய பொருள்கள் கிடைத்தன. இதைக் கீழே முற்றுகையிட்டிருந்த மன்னர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று எண்ணினார் கபிலர். ஒரு பாட்டை எழுதி அனுப்பினார். "நீங்கள் பறம்பு மலையைப்பற்றி நன்றாகத் தெரிந்து

கொள்ளவில்லை. நீங்கள் எத்தனை நாள் கீழே சுற்றி அடைத்திருந்தாலும் எங்களுக்கு ஒரு குறையும் இல்லை. கீழேயிருந்து நெல் வர வேண்டும் என்பது இல்லை. இங்கே வளரும் நெடிய மூங்கில்களில் நெல் விளைகிறது. அந்த அரிசியைக் கொண்டு நாங்கள் சமைத்துச் சாப்பிடுவோம். இங்கே எத்தனையோ பலாமரங்கள் இருக்கின்றன. அவற்றில் கனிந்து தொங்கும் பழங்கள் வேறு இருக்கின்றன. வள்ளிக் கிழங்குகள் நிறைய உண்டு. அவற்றைச் சுட்டுச் சாப்பிடுவோம். பறம்பு மலைக் காட்டிலே தேனுக்குப் பஞ்சமே இல்லை. சுனைகளில் தெளிந்த நீரும் இருக்கிறது. இவ்வளவையும் வைத்துக் கொண்டு எவ்வளவு ஆண்டுகளானாலும் சுகமாக இருக்க முடியும். உங்கள் படைப் பலத்தைக் கொண்டு பாரியை வெல்ல முடியாது. ஆனாலும் ஒரு தந்திரம் செய்தால் இவன் நாட்டைப் பெறலாம். பாட்டுப் பாடக் கற்றுக்கொண்டு நீங்கள் வாருங்கள். உங்கள் மனைவிமாருக்கு ஆடல் பாடலைக் கற்றுக்கொடுத்து அவர்களையும் அழைத்து வந்து பாடுங்கள். அப்போது பாரி, பறம்பு நாட்டைக் கேட்டாலும் கொடுப்பான்; பறம்பு மலையையும் கொடுப்பான்!'' என்று அந்தப் பாட்டிலே இருந்தது.

அதைப் பார்த்த அரசர்கள் மிகவும் நாணம் அடைந்தனர். ஒன்றும் செய்ய முடியாமல் ஊருக்குத் திரும்பிப் போய்விட்டார்கள்; ஆயினும் அவர்களுடைய கோபம் தீரவில்லை.



வஞ்சகமாக, பாட்டுப் பாடத் தெரிந்த சிலரை அனுப்பிப் பாரியைக் கொலை செய்யும்படி அம்மன்னர்கள் ஏவிவிட்டார்கள். அவர்கள் பாரியினிடம் வந்து, தனியே அழைத்துச் சென்று கொன்றுவிட்டு ஓடிவிட்டார்கள்.

பாரியின் பிரிவால் கபிலர், எல்லை இல்லாத துயரத்துக்கு ஆளானார். தம்முடைய உயிரையும் மாய்த்துக்கொள்ளத் துணிந்தார். ஆனால் பாரியின் பெண்கள் இரண்டு பேரையும் என்

ணியபோது அந்தக் கருத்தை விட்டொழித்தார். அவர்களை நல்ல இடத்தில் சேர்ப்பதே முதல் கடமை என்று தீர்மானித்தார். அதன்மேல் அவர்களை அழைத்துக்கொண்டு திருக்கோவலூருக்கு அருகில் ஓரிடத்தில் பாதுகாப்பாக இருக்க வைத்துச் சென்றார்.

சில சிற்றரசர்களிடம் சென்று பாரியின் பெண்களை மணந்துகொள்ளும்படி கேட்டார். அவர்கள் மாட்டோம் என்று சொல்லி விட்டார்கள். தாம் அவர்களை மணந்துகொண்டால் சேர சோழ பாண்டியர்களின் விரோதம் தமக்கு ஏற்படுமோ என்ற பயம் அவர்களுக்கு. பாரி இருந்தபோது அந்தப் பெண்கள் இருந்த செல்வ நிலையையும் இப்போது இருக்கும் நிலையையும் எண்ணி, அவர் உருகினார். எப்போதும் பாரியுடன் இருந்து, பொழுது போக்கி இன்புற்ற அவருக்கு, அவன் இல்லாத உலகத்தில் வாழவே பிடிக்கவில்லை. அவர் நினைத்த காரியமும் நிறைவேறவில்லை. அதனால் பின்னும் உலக வாழ்க்கையில் வெறுப்பு உண்டாயிற்று. சேர அரசனிடம் சென்று அவனைப் பாடிப் பொன் பெற்று வந்து, அங்கவை சங்கவைகளிடம் அளித்தார். பின்பு ஔவையாரைக் கண்டு அவரிடம் அப்பெண்களை ஒப்படைத்து விட்டுக் கையை உதறிக்கொண்டு புறப்பட்டுவிட்டார்.

எங்கே? அவர் பாரி இருக்கும் இடத்துக்குப் போகவேண்டும் என்று துடித்தார். இந்த உடம்புடன் போக முடியுமா? திருக்கோவலூருக்கு அருகில் ஓர் இடத்தில் தீயை மூட்டி அதிலே பாய்ந்து உயிரை நீத்தார். அவ்விடத்தில் இன்றைக்கும் கபிலக் கல் என்ற ஒரு கல் இருக்கிறது.

பாரிக்கும் கபிலருக்கும் இடையே இருந்த நட்பின் உயர்வைத் தமிழுலகம் முழுவதும் பாராட்டியது. பாரியின் சிறந்த குணத்தில் ஈடுபட்டு அவனுக்கே தம் தமிழையும் உயிரையும் கொடுத்த கபிலரைத் தமிழ்ப் புலவர்கள் தெய்வத்தைப்போல் போற்றினார்கள்.

# இடைக்காடர்

பழைய காலத்தில் மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்தது. தமிழ்ப் புலவர்கள் பலர் சேர்ந்துகொண்டு, பழைய தமிழ் நூல்களை ஆராய்ச்சி செய்து வந்தார்கள். புதிய நூல்களை இயற்றினார்கள். தமிழ் நாட்டில் யாரேனும் புலவர் ஒரு நூல் இயற்றினால் உடனே அதற்கு மதிப்பு வந்துவிடாது. மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்குப் போய் அங்கே இருந்த புலவர்களிடம் அதை வாசித்துக் காட்டவேண்டும். புலவர் சபையில் முதல்முதலாக வாசித்துக் காட்டுவதை அரங்கேற்றல் என்பது வழக்கம். அரங்கு என்றால் சபை; சபையில் ஏற்றுதல் என்பது அதற்கு அர்த்தம். புலவர்களுடைய நூல்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றப் பட்டால் தமிழ் நாட்டினர் அவற்றைப் பாராட்டுவார்கள். தமிழ்ச் சங்கப் புலவர்களுக்கு அத்தனை மதிப்பு இருந்து வந்தது.

படித்த புலவர்களாக இருந்தாலும் சிலருக்கு நல்ல குணம் இருப்பதில்லை. இப்போதுகூட அப்படித்தானே? நன்றாகப் படித்திருப்பான்; பட்டம் பெற்றிருப்பான். ஆனால் கெட்ட குணம் உடையவனாக இருப்பான். இப்படிப்பட்ட மனிதர்கள் எப்போதும் இருப்பார்கள்.

ஒரு காலத்தில் அந்தத் தமிழ்ச் சங்கத்தில் பொறாமை படைத்த புலவர்கள் சிலர் இருந்தார்கள். அவர்களுக்குத் தாங்கள் எழுதுவதுதான் கவி, மற்றவர்கள் பாட்டெல்லாம் மட்டம் என்று நினைப்பு. உலகம் அப்படிச் சொன்னால் நம்புமா? நல்ல பாட்டை நல்ல பாட்டென்று வெளியில் உள்ளவர்கள் சொல்வார்கள்; ஆனால் சங்கப் புலவர்கள் அது நன்றாக இல்லை என்று சொல்லியிருப்பார்கள். பாட்டைக் கேட்பவர்கள், "அடா! இந்த அழகான கவியையா அவர்கள் ஒதுக்கிவிட்டார்கள்?" என்று சொல்வார்கள். இதனால் சங்கப் புலவர்களிடம் இருந்த நம்பிக்கையும் மதிப்பும் குறைந்துவிடும் நிலை வந்துவிட்டது.

சங்கப் புலவர்களுக்கும் இது தெரிந்தது. எப்படியாவது தங்கள் மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்று எண்ணினார்கள். கெட்ட குணத்தைத் திருத்திக்கொண்டால் மதிப்பு உயரும். அப்படிச் செய்ய அவர்களுக்கு விருப்பம் இல்லை. அயல் புலவர்களை முன்னுக்கு வரவொட்டாமல் அழுத்தவேண்டும்; தங்கள்

மதிப்பும் குறையக்கூடாது. இதற்கு என்ன வழி என்று யோசித்தார்கள். கடைசியில் ஒரு தந்திரம் செய்யத் தீர்மானித்தார்கள்.

அந்தக் காலத்தில் பனையோலையில்தான் எதையும் எழுதுவார்கள். எழுத்தாணியினால் ஏட்டில் வேகமாக எழுதி வந்தார்கள். நூல்களை எழுதி, அதற்காகக் கூலி வாங்கும் எழுத்தாளர்கள் இருந்தார்கள். மிகவும் கெட்டிக்காரர்களாகிய எழுத்தாளர்கள் சிலரைச் சங்கப் புலவர்கள் தேடிக் கண்டு பிடித்தார்கள். அவர்களுக்கு வேண்டிய கூலி கொடுப்பதாகச் சொன்னார்கள். அவர்களைக் கொண்டு, தங்கள் காரியத்தை நிறைவேற்றிக்கொள்ள முனைந்தார்கள். என்ன செய்தார்கள் தெரியுமா?

யாராவது புலவர் வந்து, தாம் இயற்றிய கவியைச் சங்கத்தில் சொல்வார்கள். அங்கே திரைக்கு அப்பால் எழுத்தாளர்கள் பழைய வெற்றேடும் எழுத்தாணியுமாக உட்கார்ந்திருப்பார்கள். புலவர் சொல்லச் சொல்ல அந்தக் கவிகளை ஏட்டில் உடனுக்குடன் எழுதிவிடுவார்கள். புலவர் எல்லாவற்றையும் பாடி முடித்தவுடன் சங்கப் புலவர் ஒருவர், "இந்தப் பாட்டுகள் முன்பே யாரோ பாடியவை அல்லவா?" என்று கேட்பார்.

"இல்லையே! நான் பாடியவையே" என்று வந்த புலவர் சொல்வார்.

"இல்லை, இல்லை. எங்கள் சங்கத்தில் இந்தப் புத்தகம்



இருக்கிறதே!" என்று சங்கப் புலவர் கூறி, ஏட்டை எடுத்து வரும் படி சொல்வார். அப்போதுதான் எழுதி முடிந்திருந்த சுவடியை உள்ளே இருந்து எடுத்து வந்து காட்டுவார்கள். இதற்கென்றே, எழுதாத பழைய வெற்றேடுகளை வைத்திருந்தார்கள். புதிதாகக் கவிகளை எழுதியிருந்தாலும் பழைய சுவடியைப்போல இருக்கும். வந்த புலவர் அதைப் பார்த்துப் பிரமித்துவிடுவார். 'இது என்ன குட்டிச்சாத்தான் வேலையாக இருக்கிறதே!' என்று எண்ணி ஒன்றும் சொல்ல முடியாமல் போய்விடுவார்.

இப்படி அடிக்கடி சங்கத்தில் நடந்து வந்தது. வெளியூரில் இருந்த புலவர்கள், இந்த நிகழ்ச்சியைக் கண்டு மிகவும் வருத்தம் அடைந்தார்கள். இந்த அக்கிரமத்தை எப்படி நிறுத்துவது என்று எண்ணி எண்ணிச் சோர்ந்து போனார்கள்.

அப்போது அவர்களுக்கு இடைக்காடர் என்ற புலவருடைய நினைவு வந்தது. அவர் கடவுளுடைய அருள் பெற்றவர். சிறந்த புலவர். மற்ற மனிதர்களால் செய்ய முடியாத அற்புதமான காரியங்களைச் செய்கிறவர். அவரை இடைக்காட்டுச் சித்தர் என்றுகூடச் சிலர் சொல்வதுண்டு.

இடைக்காடரிடம் புலவர்கள் போனார்கள். சங்கத்தில் நடைபெறும் அக்கிரமத்தை எடுத்துச் சொன்னார்கள். "எப்படி யாவது நீங்கள் இதை நிறுத்த வழி பண்ணவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்கள். இடைக்காடர் அப்படியே செய்வ தாக ஒப்புக்கொண்டார்.

ஒரு நாள் இடைக்காடர் மதுரைக்குப் போனார். தமிழ்ச் சங்கத்துக்குப் போய், தாம் ஒரு நூலை இயற்றியிருப்பதாகவும், அதை அரங்கேற்ற வந்திருப்பதாகவும் சொன்னார். அவர், இறைவன் அருள் பெற்றவர் என்பது புலவர்களுக்குத் தெரியும். ஆதலால் அவரைக் கண்டவுடனே அவர்களுக்கு மனசுக்குள் கொஞ்சம் நடுக்கம் எடுத்தது.

இடைக்காடர் பாட்டைச் சொல்ல ஆரம்பித்தார். வந்தவர் கள் பாடப்பாட யாரோ வேகமாக அதை எழுதிக்கொள்கிறார்கள் என்று இடைக்காடர் தெரிந்துகொண்டார். அவர்கள் எழுத முடி யாத வகையில் பாட்டுப் பாடவேண்டும் என்பது அவர் எண்ணம். எவ்வளவு வேகமாகச் சொன்னாலும் எழுதுகிறவர்கள் எழுதி விடக்கூடும். ஆகையால் வேகமாகச் சொல்வதில் பயன் இல்லை. எழுத முடியாத ஒலிகளைப் பாட்டில் இணைத்துப் பாடினால் அவர்களால் எழுத முடியாது என்று அவருக்குத் தோன்றியது.

அவர் பாட ஆரம்பித்தார். ஒரு காட்சியை வருணித்தார்.

ஆற்றங்கரையில் ஒரு மாமரம். அதன்மேல் காக்கை இருந்து கா, கா என்று கத்திக்கொண் டிருந்தது. அந்த மரத்தின் அடியில் ஓர் இடையன் கட்டுச் சோற்றை அவிழ்த்துச் சாப்பிட்டுக்கொண் டிருந்தான். காக்கை கத்துவது அவனுக்குப் பொறுக்க வில்லை. அவன் கையில் கோல் இருந்தால் அதை வீசி எறிந்து காக்கையை ஓட்டியிருப்பான். கோல் இல்லை; ஆகவே வாயினால் 'சூ, சூ' என்று ஓட்டினான்.

இந்தக் காட்சியைப் பாட்டாகப் பாடினார் இடைக்காடர். காக்கை கத்துவதைப்போலவே கத்தினார். இடையன் ஓட்டுவதைப்போலவே ஓசை எழுப்பினார். அந்தச் சத்தங்களை அப்படியே எழுத முடியாது. பாட்டு வருமாறு:

**ஆற்றங் கரையில் அருகிருக்கும் மாமரத்தில்**
**காக்கை இருந்து கஃகஃகெனக்—காக்கை தனை**
**எய்யக் கோல் இல்லாமல் இச்இச்இச் என்றானே**
**வையக்கோ னார்தம் மகன்.**

இந்த ஒரு பாட்டோடு அவர் நிற்கவில்லை. இடையன் ஆட்டை ஓட்டுகிற சத்தம், தும்மும் சத்தம், ஆடு கத்துகிற சத்தம் இப்படியாக எழுத்தில் எழுத முடியாதபடி சில ஒலிகளையும் வைத்துக் கவிகளைச் சொன்னார்.

உள்ளே இருந்தவர்கள் ஓர் ஒலியைக் கேட்டு, எந்த எழுத்தால் அதைக் குறிக்கலாம் என்று யோசிப்பதற்குள் இடைக்காடர் பாட்டு முழுவதையும் பாடி முடித்து,அடுத்த பாட்டைத் தொடங்கி விடுவார். பாட்டுக்குமேல் பாட்டாக வந்தது. ஒவ்வொரு பாட்டிலும் இந்த மாதிரி எழுத முடியாத ஓசைகள் வந்தன. உள்ளே இருந்தவர்கள் எழுத முடியாமல் திண்டாடினார்கள். இதுவரையில் இவ்வாறான சங்கடம் அவர்களுக்கு ஏற்படவே இல்லை. எழுத்தாளர்களுக்கு அப்போது நல்லறிவு உண்டாயிற்று. 'இவ்வளவு காலமாக நாம் எவ்வளவோ உத்தமர்களுடைய மனம் புண் படும்படியாகச் செய்துவிட்டோம். இனிமேல் இப்படிச் செய்யக் கூடாது' என்று எண்ணினார்கள். அவர்கள் எழுத்தாணியும் கையுமாக வெளியே வந்தார்கள். அதை இடைக்காடர் முன் வைத்து வணங்கினார்கள். "இதுவரைக்கும் நாங்கள் செய்த பிழையைப் பொறுக்க வேண்டும்" என்று அழுதார்கள். புலவர்களும் வணங்கினார்கள். இடைக்காடர் அவர்களிடம் அன்

பாகப் பேசி, "இனிமேல் உங்கள் பொறாமையையும் வஞ்சகச் செயலையும் விட்டொழியுங்கள்" என்று சொல்லிப் புறப்பட்டுச் சென்றார்.

அது முதல் கவிஞர்கள் தங்கள் நூல்களை நல்ல முறையில் தமிழில் அரங்கேற்றலானார்கள். இடைக்காடர் அப்போது பாடின நூல், எழுத்தாணியை எழுதவிடாமல் செய்துவிட்ட காரணத்தால் 'ஊசி முறி' என்ற பெயரைப் பெற்றது. ஊசி என்பது எழுத்தாணிக்கு ஒரு பேர். இடைக்காடரைப் புலவர்கள் யாவரும் பாராட்டினார்கள்.

# அரிசில்கிழார்

"நல்லவர் என்பதில் தடை இல்லை. ஆனாலும்......" அவன் மேலே சொல்லாமல் இழுத்தான்.

"ஆனாலும் என்ன?" என்று புலவர் கேட்டார்.

"அவர் யார்? விளக்கமாகச் சொல்" என்றார் அரிசில்கிழார்.

"பேகன், பெரிய வள்ளல் என்ற புகழ் தமிழ்நாடு முழுவதும் பரவியிருக்கிறது. புலவர்களிடத்தில் எவ்வளவோ பிரியமாக இருக்கிறார். குடிமக்களிடத்தில் அன்பு உடையவரே. ஆனால் இங்கே அவரைப் பிரிந்து, தனியே வாழுகிறாள் அவருடைய மனைவி கண்ணகி. அந்த அம்மாளுக்கு எத்தனை துயரம் இருக்கும்!"

"ஏன் பிரிந்து வாழுகிறாள்?"

"அந்த அம்மாள் பிரியவில்லை. பேகனாரே பிரிந்து வாழ்கிறார்."

"என்ன காரணம்?"

"ஒரு காரணமும் இல்லை. இல்வாழ்வில் சிறிய மனத்தாங்கல் நேர்வது இயல்புதான். அதைப் பெரிதாகக் கொள்ளலாமா? தங்களைப்போன்ற புலவர்கள் எங்கள் அரசருக்கு அறிவுரை கூறினால் மறுபடியும் அந்தப் பெண்மணி நல்ல வாழ்வைப் பெறலாம்."

இவ்வாறு சொன்னவன் அரண்மனையைச் சேர்ந்த அதிகாரிகளில் ஒருவன். அரிசில் என்ற ஊரிலே பிறந்த அரிசில்கிழார் என்னும் புலவரிடந்தான் அவன் பேசினான்.

"நல்ல யோசனை. அப்படியே செய்யலாம்" என்றார் புலவர்.

அப்போது அங்கே வந்திருந்த கபிலர், பரணர், பெருங்குன்றூர்கிழார் என்பவர்களிடமும் இந்தச் செய்தியைச் சொன்னார். "ஒவ்வொருவரும் வள்ளல் பேகனிடம் சொல்வோம். அவன் தன் மனைவியோடு ஒன்றுபட்டு வாழவேண்டுமென்று பாட்டிலே வைத்துச் சொல்வோம்" என்றார். அவர்களும் அதற்கு இசைந்தார்கள்.

பழனியாண்டவன் கோயில் கொண்டிருக்கும் பழனிக்குப் பழங்காலத்தில் ஆவினன் குடி என்று பேர். அங்கே பேகன் என்ற சிற்றரசன் வாழ்ந்திருந்தான். பேகன், வேளிர்களில் ஒருவன். ஏழு பெரு வள்ளல்களில் இவனும் ஒருவன்.

தமிழ்ப் புலவர்களிடத்தில் அவன் அதிகமான மதிப்பு வைத்துப் பழகினன். கடவுளிடத்தில் பக்தி நிறைந்தவன். ஏதோ சிறு சச்சரவு காரணமாக அவன் தன் மனைவி கண்ணகி என்பவளை விலக்கி வைத்திருந்தான். இந்த நிலையை மாற்ற அரிசில் கிழார் மற்றப் புலவர்களையும் சேர்த்துக்கொண்டார்.

எல்லோரும் பேகனிடம் சென்று பாடினர்கள். அவன் அவற்றைக் கேட்டு, மகிழ்ந்து, பரிசில் கொடுக்க வந்தான். "இந்தப் பரிசில் வேண்டாம்" என்று புலவர்கள் சொன்னார்கள். "என்னல் இயன்ற வேறு பரிசில் எது கேட்டாலும் தருகிறேன்" என்றான் அவன். "அப்படியானல் நீ உன் மனைவியுடன் சேர்ந்து வாழவேண்டும்" என்று புலவர்கள் சொல்லி, ஆளுக்கு ஒரு கவி பாடினர்கள்.

"நீ கொடுக்கும் நகைகளும் பொன்னும் எனக்கு வேண்டாம். எனக்கு விருப்பமான பரிசிலை அளிக்க வேண்டும் என்று உனக்கு எண்ணம் இருந்தால், நீ உடனே ஒன்று செய்ய வேண்டும். உன்னுடைய அன்பைப் பெறுமல், அலங்காரங்களைச் செய்துகொள்ளாமல், தன் கூந்தலில் மலரைச் சூடிக்கொள்ளாமல் இருக்கிறள் உன் மனைவி. அவள் மறுபடியும் மலரைச் சூடிக்கொள்ள வேண்டும். உடனே தேரில் குதிரையைப் பூட்டிப் புறப்படு" என்று அரிசில் கிழாரும் பாடினர்.

தமிழ் நாடு அறிந்த பெரும் புலவர்கள் சொல்வதைத் தட்டும் துணிவு பேகனுக்கு இல்லை. உடனே தன் மனைவியை அழைத்துக்கொண்டு பழையபடி வாழத் தொடங்கினன்.

* * *

சேர நாட்டை அந்தக் காலத்தில் பெருஞ்சேரல் இரும்பொறை என்ற சேர அரசன் ஆண்டு வந்தான். அவனைப் பார்க்கும்பொருட்டு அரிசில்கிழார் வஞ்சிமாநகருக்குச் சென்றார். சேரன் அவரை வரவேற்று உபசரித்தான். "என்னுடனே தங்கி என்னுடைய அவைக்களத்தைச் சிறப்பிக்க வேண்டும்" என்று அன்புடன் கேட்டுக்கொண்டான். அவனுடன் சில காலம் இருந்த புலவர், அவ்வரசனுடைய நல்ல குணங்களில் ஈடுபட்டார். நாளுக்கு நாள் அவனுடைய அன்பு ஓங்கி வந்தது; அவன் செய்த உபகாரமும் அதிகமாயிற்று. அவனைப்பற்றிக் கவிபாட எண்ணினர் அரிசில்கிழார். அவனுடைய வீரத்தை



யும் பகைவரோடு போர் செய்து வெற்றி பெற்றதையும் பத்துப் பாடல்களில் பாடினார்.

அந்தப் பாடல்களைக் கேட்ட சேரன் உள்ளத்தில் நன்றி அறிவு பொங்கியது. எழுத்துக்கு ஆயிரம் பொன் தருவதற்கு ஏற்ற பாடல்கள் அவை என்று தோன்றியது. என்ன பரிசில் தருவது?

அரசன் ஒரு பை நிறையப் பொன்னைக் கொண்டு வரச் செய்தான். அதைப் பரிசாக அளிக்கப் போகிறான் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அரசன் தன் பட்ட மகிஷியை அழைத்துக் கொண்டு வரச் செய்தான். தன் மனைவியின் கையிலிருந்து

வெற்றிலை பாக்கை வாங்கினன். அரிசில்கிழாரிடம் கொடுத்தான். பொன் நிறைந்த பையையும் அளித்துவிட்டுப் பேசலானன்: "புலவர் பெருமானே, தாங்கள் என்னிடம் பூண்டுள்ள கருணையை என்னென்று சொல்வேன்! இந்தச் சிறியேனைத் தங்களுடைய கவிதையால் இறவாதவன் ஆக்கிவிட்டீர்கள். தங்களுக்கு யான் என்ன பரிசிலைக் கொடுப்பேன்? இந்தக் கிழியில் ஒன்பதினுயிரம் பொன் இருக்கிறது. இதுவும் ஒரு பரிசிலா? கடைசியில் ஓர் எண்ணம் எனக்குத் தோன்றியது. இதோ இந்த அரண்மனையையே தங்களுக்கு வழங்கிவிட்டேன்."

உடன் இருந்தவர்களுக்குத் தூக்கிவாரிப்போட்டது! அரிசில் கிழாரும் பிரமித்துப்போனர்.

"அரண்மனை மாத்திரம் அன்று. சிங்காசனமே தங்களுடையதுதான். அரசாட்சியும் தங்களைச் சார்ந்ததே. என்னைப் போன்ற அகங்காரிகள் அரசாட்சி செய்வதனல் போர்தான் மிகுதியாகிறது. அதனல் மக்களுக்குத் துன்பம் உண்டாகிறது. தாங்கள் அரசாண்டால் நாடு முழுவதும் அமைதி உண்டாகும். தங்களுக்குப் பகைவரே உண்டாக மாட்டார்கள்" என்று சொல்லி அவரை வணங்கினன்.

அரிசில்கிழார் சிறிது நேரம் பேச முடியாமல் திணறினர். பிறகு புன்முறுவல் பூத்தார். "எத்தனையோ அரிய பொருள்களைப் பற்றி நான் கேள்வியுற்றிருக்கிறேன். யானையைக் கொடுத்தவர்கள் உண்டு. நாட்டின் ஒரு பகுதியை அளித்தவர்கள் உண்டு. ஆனல் அரண்மனையையும் அரசாட்சியையும் புலவனுக்கு வழங்கியதாகக் கதையிலும் கேட்டதில்லை. நீ எல்லாக் கொடையாளிகளிலும் உயர்ந்தவன்."

**அரசன்:** இந்தக் கொடையை ஏற்றுக்கொண்டு என்னைப் பெருமைப்படுத்த வேண்டும்.

**அரிசில்கிழார்:** ஏற்றுக்கொண்டேன்.

உடன் இருந்தவர்களுக்கு இரண்டாவது முறையாகப் பிரமிப்புத் தட்டியது. "நான் இப்போது அரசனைப்போல இருந்து, கொடுக்க ஆசைப்படுகிறேன். இந்த நாட்டை உனக்கே வழங்குகிறேன்" என்றார் புலவர்.

"கொடுத்ததை மீட்டும் வாங்குவது நியாயம் அல்லவே!"

"நான் இன்னும் சரியானபடி வாங்கிக்கொள்ள வில்லையே! வாங்கியதாக வைத்துக்கொண்டாலும் என்னுடைய பிரதிநிதி

யாக இருந்து, இந்த நாட்டை ஆளும்படி வேண்டிக்கொள்கிறேன்."

ஓர் இனிய நாடகக் காட்சியைக் காண்பதுபோல இருந்தது மற்றவர்களுக்கு.

அரிசில்கிழார் வற்புறுத்தினர். அரசன் அவர் வார்த்தையை மறுக்க முடியவில்லை. "ஆனால் ஒரு வரம் அருள வேண்டும். அரசராக இருந்து ஆட்சி புரியாவிட்டாலும் அமைச்சராக இருந்து, எனக்குத் துணை புரியவேண்டும். அப்படி இருந்தால், தங்களுடைய அறிவுரையால் நான் திருந்தி, நல்ல செயல்களைச் செய்ய முடியும்" என்று அரசன் பணிந்து, கெஞ்சிக் கேட்டான்.

அதைப் புறக்கணிக்க அரிசில்கிழார் விரும்பவில்லை. அன்று முதல் அரிசில்கிழார் சேர அரசனுடைய அமைச்சராக இருந்து விளங்கினர். அரசனுக்கு அடங்கிய அமைச்சராக அல்ல; அரசனை அடக்கி அறிவுரை கூறும் நல்லமைச்சராக வாழ்ந்தார்.

# உயிர் காத்த கோவூர்கிழார்

திருக்கோவலூர் என்று ஓர் ஊர் திருவண்ணுமலைக்குப் போகிற வழியில் இருக்கிறது. பழைய காலத்தில் அது ஒரு சிறிய நாட்டுக்குத் தலைநகராக இருந்தது. காரி என்ற வள்ளல் அந்த நாட்டுக்குத் தலைவனுக விளங்கினுன். அந்த நாட்டுக்கு மலையமான் நாடு என்று பெயர். மலையமான் என்பது, அதை ஆளும் தலைவனுக்குப் பெயர். காரியை மலையமான் திருமுடிக்காரி என்று சொல்வார்கள்.

அவனுக்கு உள்ளது சிறிய நாடுதான்; ஆனுலும் சேர சோழ பாண்டிய நாட்டுப் பொருளெல்லாம் அவனைத் தேடி வரும். எப்படி என்று கேட்கிறீர்களா? சொல்கிறேன்.

காரி பெரிய வீரன். அவனிடம் மிகவும் பலசாலிகளான வீரர்கள் பலர் இருந்தார்கள். அவர்கள் யாவருமே காரியின் சொல்லை மீருதவர்கள். அந்தப் படை எங்கே போர் செய்யப் போனுலும் வெற்றிதான்.

காரிக்குப் பகைவர் யாரும் இல்லை. ஆனுலும் அவன் அடிக்கடி தன் படையுடன் போரில் ஈடுபட்டிருப்பான். சேர சோழ பாண்டியர்கள் எப்போதேனும் யாருடனுவது போர் செய்ய வேண்டியிருந்தால், தங்கள் கட்சிக்கு உதவி செய்ய வேண்டும் என்று காரியை வேண்டிக்கொள்வார்கள். அவன், தன் படையுடன் சென்று, அவர்களுடைய படையுடன் சேர்ந்து, போர் செய்வான். நிச்சயமாக அவன் சேர்ந்திருக்கும் கட்சிக்குத் தான் வெற்றி உண்டாகும். இந்த உண்மையைத் தமிழ் நாட்டு அரசர்கள் யாவரும் உணர்ந்திருந்தார்கள். போர் முடிந்து, வெற்றி பெற்ற பிறகு, தமக்கு அந்த வெற்றியை வாங்கித் தந்த பெரு வீரனுகிய மலையமானுக்கு, அவன் உதவியைப் பெற்ற அரசன், பொன்னும் பொருளும் யானையும் குதிரையும் தேரும் வழங்குவான். பகைவரிடமிருந்து பெற்ற பொருளிலும் பங்கு கொடுப்பான். மலையமான் பெரிய அரசனைப் போன்ற செல்வத்தோடு வாழும் அளவுக்கு அவனுக்குப் பொருள் கிடைத்தது.

ஆனுல் அவன் என்ன செய்தான் தெரியுமா? தமிழ்ப் புலவர்களிடத்திலும் இசைவாணர்கள் இடத்திலும் அவனுக்கு அளவற்ற அன்பு, அவன் போர்செய்யாத காலமெல்லாம் எப்போதும் புலவர்கள் தன்னைச் சூழ, இருப்பான். அவர்களுடைய கவிகளைக்

கேட்டு மகிழ்வான். பொன்னை வாரி வழங்குவான். யானை, குதிரை, தேர் ஆகியவற்றைக் கொடுப்பான். இப்படிக் கணக்கில்லாத தேர்களைப் புலவர்களுக்குக் கொடுத்ததனால் '**தேர்வண் மலையன்**' என்று அவர்கள் அவனைப் பாராட்டினார்கள். தேர் வழங்கும் வள்ளன்மையை உடைய மலையமான் என்பது அதற்குப் பொருள்

மலையமான் திருமுடிக்காரியின் துணையைப் பெறாத அரசர்கள் அவன் பெயரைக் கேட்டாலே நடுங்குவார்கள். அக்காலத்தில் உறையூரில் இருந்து, அரசு செலுத்திய சோழனுக்குக் கிள்ளி வளவன் என்று பெயர். அவன் இரண்டொரு சமயங்களில் மலையமானுடைய உதவியைப் பெற நினைந்தான். அவனால் பெற முடியவில்லை. அதனால் அவனுக்குக் காரியினிடம் கோபம் உண்டாயிற்று. அந்தக் கோபம் காரியை என்ன செய்ய முடியும்!

திருமுடிக்காரி இறந்துவிட்டான். அந்தச் செய்தியைக் கேட்டுத் துடிதுடித்துப்போனார்கள் புலவர்கள். தன்னுடைய வீரத்தால் புலமையை வளர்த்த பெருமான் அல்லவா அவன்! புலவர்களுக்கு உதவி புரியாத மன்னர்களிடமும் தன் படையை உதவி, பொருள் பெற்றுப் புலவர்களுக்கு ஈந்த வள்ளல் அவன். அவனால் பல போர்களில் வெற்றி பெற்ற மன்னர்களும் அவனுடைய மறைவை அறிந்து, துயரடைந்தார்கள்.

இத்தனை பேர்களுக்கிடையே, 'மலையமான் தொலைந்தான்' என்று மகிழ்ச்சி அடைந்தவர்களும் இருந்தார்கள். அவர்களில் கிள்ளிவளவனும் ஒருவன். 'இனிமேல் மலையமானுடைய படை நம்மை எதிர்த்தால் என்ன செய்வது என்ற ஏக்கம் எந்த அரசருக்கும் உண்டாகாது. அவரவர்களுடைய சொந்த வீரத்துக்குத் தக்கபடி வெற்றி தோல்வி அமையும்' என்று சொல்லி மகிழ்ந்தான்.

"அவனுக்குக் குழந்தைகுட்டிகள் உண்டோ?" என்று விசாரித்தான் வளவன்.

"இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள்" என்று அமைச்சன் ஒருவன் சொன்னான்.

"அப்படியா? அந்தப் பாம்புக்குக் குட்டிகளும் இருக்கின்றனவா?" என்று சொல்லும்போது அவன் குரலின் வன்மை குறைந்தது.

'சிங்கத்துக்குப் பிறந்த குட்டிகள் அல்லவா?'' என்று அங்கு வந்திருந்த புலவர் ஒருவர் கேட்டார். கிள்ளிவளவன் அதைக் காதில் வாங்கிக்கொள்ளவில்லை.

அன்று முதல் அவன் உள்ளத்தில் பொல்லாத எண்ணம் ஒன்று முளையிட்டது. 'எப்படியாவது அந்தப் பிள்ளைகளையும் தகப்பனார் போன இடத்துக்கே அனுப்பிவிட வேண்டும்' என்ற எண்ணந்தான் அது. அவர்கள் இருவரும் குழந்தைப் பருவம் தாண்டாதவர்கள் என்பதை அறிந்தும் அவன் மனத்தில் பதிந்திருந்த பகையுணர்ச்சி போகவில்லை. ''குழந்தைகளாக இருந்தால் என்ன? முள்மரத்தை இளஞ்செடியாக இருக்கும்போதே




களைந்து எறிவதுதான் நல்லது'' என்று கிள்ளிவளவன் சொன்னான்.

அந்தச் சின்னஞ் சிறு பாலகர்களை எப்படியோ பற்றிக் கொண்டுவந்து விட்டார்கள் முரடர்கள். கிள்ளிவளவனிடம் பரிசுபெறச் செய்த வேலை!

"அக்குழந்தைகள் இருவரையும் யானைக்காலில் இடறி விடுங்கள்!'' என்று உத்தரவிட்டான் கொடுமனம் படைத்த கிள்ளிவளவன்.

இந்தச் செய்தி எப்படியோ நாட்டுமக்களுக்குத் தெரிந்து விட்டது. காரியினிடம் யாவருக்கும் அன்பு இருந்தது. 'இளங்



குழந்தைகளைக் கொல்வது முறையாகாது' என்று அரசனோடு நெருங்கிப் பழகுகிறவர்கள் எடுத்துரைத்தார்கள். அவன் சிறிதும் இரங்கவில்லை.

குழந்தைகளைக் கொல்ல நாள் குறித்தாயிற்று. கொலை செய்யும் யானையும் வந்துவிட்டது. புலவர் உலகத்திலும் இந்தச் செய்தி மெல்லப் பரவியது. எல்லோரும் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தனர்.

அக்காலத்தில் கோவூர் என்று சோழ மண்டலத்தில் உள்ள ஊரில் ஒரு பெரும் புலவர் வாழ்ந்துவந்தார். புலவர்கள் யாவரும் மதிக்கும் மாட்சி பெற்றவர் அவர்; முடியுடைய மன்னர்கள் வணங்கும் தகுதி பெற்றவர். அவர் வந்து, வளவனுக்கு நல்லுரை கூறினால் ஒருகால் அந்த இளங்குழந்தைகள் உயிர் பிழைக்கும் என்ற எண்ணம் புலவர்களுக்கு உண்டாயிற்று. சில புலவர்கள் இந்தக் கொடுமையைக் கோவூர்கிழாரிடம் போய்ச் சொன்னார்கள். "நம் காரியின் குழந்தைகளையா கொல்லப் போகிறான்!" என்று திடுக்கிட்டவராய் அவர் உடனே புறப்பட்டுவிட்டார்.

இங்கே, கொலைக்களத்துக்குக் குழந்தைகளைக் கொண்டு சென்றனர். யானையைக் கொண்டுவர ஏற்பாடாகிவிட்டது. மக்கள் அங்கங்கே கூடிக் கூடி, "மகா பாபி! எதற்கும் அஞ்சாத கொடியவன்" என்று சோழனைத் தூற்றிக்கொண் டிருந்தனர்.

"கோவூர்கிழாருக்கு இந்தச் செய்தி போயிருக்கிறதாமே! அவர் வந்தால் சோழன் தன் பிடுக்கைத் தளர்த்துவான்" என்றார் சிலர்.

"அவர் ஊரில் இருந்து, சமயத்துக்கு வரவேண்டுமே!" என்று சிலர் சந்தேகத்தை எழுப்பினர்.

"அவர் வந்தால்தான் என்ன செய்வது? இந்த முரடன் இரங்குவானா?" என்று ஒருவர் கேட்டார்.

"என்ன அப்படிச் சொல்கிறீர்? கோவூர்கிழாராலே சாதிக்க முடியாத காரியமும் உண்டா? இந்தக் குழந்தைகளின் தலைச் சுழி நன்றாக இருந்தால் அவர் வருவார்" என்றார் மற்றொருவர்.

அப்போது புதிய ஆரவாரம் கேட்டது. "வந்துவிட்டார்; வந்துவிட்டார்!" என்று மக்கள் பேசிக்கொண்டார்கள். கோவூர் கிழாரே வந்துவிட்டார்! அவர் முதலில் அரசனிடம் போகவில்லை. நேரே கொலைக்களத்துக்குச் சென்றார். அங்கே

குழந்தைகள் இரண்டும் அழுதுகொண் டிருந்தன. அப்போதுதான் யானையையும் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அதைப் பார்த்த குழந்தைகள், சிறிது நேரம் அழுகையை நிறுத்தி, வேடிக்கை பார்த்தன. தம்மைக் கொல்ல வந்த யானை என்று தெரிந்து கொள்ளாமல் குழந்தைகள் அழுகையை நிறுத்திப் பார்க்கிறார்கள் என்பதைக் கவனித்த கோவூர்கிழாருக்கு அழுகை வந்தது. அவர் தம் கண்ணைத் துடைத்துக் கொண்டார். குழந்தைகளிடம் போனார். அருகில் அவர்களுக்குக் காவலாக நின்றுகொண் டிருந்த அதிகாரி யைப் பார்த்தார். "உங்கள் வேலையைச் சிறிது நேரம் நிறுத்தி வையுங்கள். நான் மன்னனிடம் சென்று, மீண்டும் வந்து சொல் கிறேன்" என்றார்.

புலவர்களுக்கு மதிப்புக் கொடுக்கும் தமிழ் நாட்டில் பிறந்த வன் அல்லவா அந்த அதிகாரி? கோவூர்கிழார், முடியுடை மன்னர் போற்றும் பெருமையை உடையவர் என்பதை அவன் அறிவான். அவன் ஒப்புக்கொண்டான்.

உடனே புலவர், கிள்ளிவளவனை நோக்கிச் சென்றார். அவன், தன் அரண்மனையின் மேல் மாடத்தில் நின்றுகொண் டிருந்தான். கோவூர்கிழார் வேகமாகச் சென்று, அவன்முன் நின்றார். வந்த வேகத்தினால் அவர் பெருமூச்சு விட்டபடியே நின்றார்.

அவரைக் கண்டவுடன், கிள்ளிவளவன் எழுந்து, வரவேற் றான். "மிக விரைவாக மூச்சு வாங்கும்படி வந்திருக்கிறீர்களே! சொல்லி அனுப்ப வில்லையே! உட்காருங்கள்" என்றான்.

"மூச்சு வாங்கும்படி நீதான் செய்தாய். எனக்கு உட்கார நேரம் இல்லை. உன்னிடம் சில செய்திகளைச் சொல்ல வந்தேன்."

"என்ன அவசரமான காரியம்?"

"ஆம்; தலைபோகிற காரியம் இது. சொல்லட்டுமா?"

"சொல்லுங்கள்" என்றான் அரசன்.

"இளங் குழந்தைகள் இருவரை நீ கொலை புரியப் போவதாக நான் கேள்வியுற்றேன். அது நியாயமா என்று கேட்கத்தான் வந்திருக்கிறேன்" என்று படபடப்புடன் கூறினார் புலவர்.

"அவர்கள் இருவரும் மலையமான் பிள்ளைகள். அரசர்களை யெல்லாம் நடுங்கச் செய்த கொடியவனுடைய பிள்ளைகள் பெரிய வர்களாகி அவனைப் போலவே கொடுமை புரிவார்கள். அப்

போது அடக்குவதைவிட இப்போதே ஒழித்துவிடலாம் என்று எண்ணினேன்'' என்றான் அரசன்.

''அரசே! மலையமானைக் கொடியவன் என்று சொல்கிறாய்! இன்று தமிழுலகம் முழுவதும் அவனைப் போற்றுகிறது. அவன் உனக்கு என்ன தீங்கு செய்தான்? இந்தக் குழந்தைகள் உனக்கு என்ன தவறு செய்துவிட்டார்கள்? பாலைவனத்தில் வழியே போகிறவர்களை இரக்கம் இல்லாமல் கொல்லும் வேடன் செய்யும் செயலல்லவா இது? உன்னுடைய மரபைப்பற்றிச் சிந்தித்தாயா? சிபிச்சக்கரவர்த்தியின் வமிசம் என்றல்லவா உன் மெய்க் கீர்த்தி சொல்கிறது! அந்தச் சிபி என்ன செய்தான் என்பதைச் சற்றே நினைந்து பார். ஒரு புறவைக் காப்பாற்றுவதற்காகத் தன் சதையை அரிந்து கொடுத்தான்! தானே தராசில் ஏறி நின்றான்! அவனுடைய மரபில் வந்த நீயா இந்தக் கொலை பாதகத்தைச் செய்யத் துணிந்தாய்!'' கோவூர்கிழார் சிறிதே நிறுத்தினார்.

கிள்ளிவளவன் நெற்றியில் வேர்வைத் துளிகள் புறப்பட்டன. அவற்றைத் தன் கையால் துடைத்துக்கொண்டான். ஒன்றும் பேசாமல் இருந்தான். மறுபடியும் கோவூர்கிழார் சொல்லலானார்.

''இவர்கள் யார் தெரியுமா? என்னைப்போலத் தம்முடைய புலமையையே விவசாயமாகக் கொண்டு வயிறு பிழைக்கிறவர்களுடைய துன்பத்தைத் தன் துன்பமாக ஏற்றுக்கொண்ட வள்ளலினுடைய குழந்தைகள். தனக்குக் கிடைத்தவை எல்லாவற்றையும் புலவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து, அவர்களுடைய நெஞ்சிலும் நாவிலும் பாவிலும் வாழ்கிறவனுடைய குழந்தைகள்! பச்சிளம் பாலகர்கள். இவர்களைக் காப்பாற்ற வேண்டியது நல்லோர் கடமை. அப்படி இருக்க இவர்களைக் கொல்லத் துணிந்தாய்! நான் கொலைக்களத்துக்கு இப்போதுதான் போய் விட்டு வருகிறேன். அங்கே கண்ட காட்சி என் உள்ளத்தை உருக்கிவிட்டது. வந்த அழுகையைத் தடுத்துக்கொண்டேன்.''

இங்கே சற்று நிறுத்தினார். மன்னன் சற்றுக் கூர்ந்து கவனித்தான். அவன் முகத்தில் நிழல் படர்ந்தது.

''அந்த இரண்டு இளங் குருத்துக்களும் அழுதுகொண்டிருந்தன. தம் உயிரை வாங்கப் போகிறார்கள் என்று அல்ல. அவர்களுக்கு அது தெரியாது. புதிய இடம், புதிய மனிதர்கள்; ஆகையால் அழுதுகொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள்

உயிரை வாங்கும் யானை முன்னே வந்து நின்றது. அதைக் கண்டவுடன் சிறிது அழுகை நின்றது. யானையைக் கண்டு வேடிக்கை பார்த்துக்கொண்டே நின்றார்கள். அடுத்த கணத்தில் தம் உயிரை முடிக்கப் போகும் அதை வேடிக்கை பார்த்தார்கள் என்றால் அந்தப் பிஞ்சு நெஞ்சம் எவ்வளவு மாசு மறுவற்றது என்று நினைத்துப் பார். புலவர் உலகம் போற்றும் ஒருவனுடைய குழந்தைகள் என்பதை மறந்தாலும், பேதைப் பிள்ளைகளின் இளம் பருவத்தையாவது நினைத்துப் பார். அந்தக் குழந்தைகளை யா யானைக்குப் பலி யிடுவது!"

அரசன் பேச முற்பட்டான். குரல் எழும்பவில்லை; கனைத்துக்கொண்டான். புலவர் வருணித்த காட்சி, அவன் மனத்தை உருக்கிவிட்டது. அதோடு இந்தச் செயலால் புலவர்களின் சாபம் தனக்கு வரும் என்ற அச்சமும் உண்டாயிற்று.

மெல்ல வந்தது வார்த்தை. "தங்கள் உபதேசப்படி நடக்கிறேன். என் பிழையைப் பொறுக்க வேண்டும்" என்று கிள்ளி வளவன் கையைக் குவித்தான். உடனே உத்தரவு பறந்தது. கோவூர்கிழாரே மறுபடியும் ஓடினார். "என் கண்மணிகளே!" என்று அந்த இரண்டு குழந்தைகளையும் மார்போடு அணைத்துக் கொண்டார். அவருடைய இருதயம் அப்போது அடைந்த உவகையை அந்தக் குழந்தைகளால் அறிய முடியுமா!

# சோழனைக் காத்த மோசியார்

யானை வெகு வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. வீரர்கள் ஓடி வந்துகொண்டிருந்தார்கள். கையில் வாளை எடுத்துக்கொண்டு அவர்கள் ஓடிவந்தார்கள். ஒரே ஆரவாரம். யானையின்மேலே இரண்டு பேர் அமர்ந்திருந்தார்கள். ஒருவனைப் பார்த்தால் யானைப் பாகன் என்று நன்றாகத் தெரிந்தது. அவன்தான் முன்னால் உட்கார்ந்திருந்தான். பின்னால் இருந்தவன் ஒளிவீசும் முகமும் ஆடையணிகளும் அணிந்திருந்தான். அவன் அரசனாகத்தான் இருக்க வேண்டும். யானைப்பாகன் அங்குசத்தால் யானையின் மத்தகத்தில் குத்தினான். அது அடங்கவில்லை. பிளிறிக்கொண்டே ஓடியது. பின்னால் ஓடிவந்த வீரர்கள் அந்த யானையைத் துரத்திக்கொண்டு வந்தார்கள் என்றே தோன்றியது. அவர்கள் எதற்காக அதைத் துரத்த வேண்டும்? யானையின்மேல் இருந்தவர்கள் யார்? துரத்துகிறவர்களுக்கு விரோதிகளா?

பார்க்கிறவர்கள் எல்லோருக்கும் இந்தச் சந்தேகங்கள் உண்டாயினவோ என்னவோ தெரியாது. நெடுந்தூரத்தில் வரும் யானையையும் வாள் பிடித்தவர்களுடைய கூட்டத்தையும் கண்டு, சேர அரசன் பலவகையான சந்தேகங்களைக் கொண்டான்.

திருச்சிராப்பள்ளியின் ஒரு பகுதியாக இன்று உறையூர் இருக்கிறது. பழங்காலத்தில் அதுதான் பெரிய நகரமாகவும் திருச்சிராப்பள்ளி அதன் பகுதியாகவும் இருந்தன. சோழ அரசர்களின் தலைநகரம் உறையூர். முதல் முதலில் கரிகாலன் என்ற சோழச் சக்கரவர்த்தி உறையூரைப் பெரிய நகரமாக்கி அங்கே இருந்து செங்கோல் செலுத்தி வந்தான். பிறகு அதுவே சோழ இராசதானி நகரமாக விளங்கியது. அங்கே இந்தக் கதை நடந்த காலத்தில் கோப்பெருநற்கிள்ளி என்ற சோழன் அரசாண்டு வந்தான்.

அவன் காலத்தில் இருந்த சேரன், அந்துவஞ்சேரல் இரும்பொறை என்பவன். அவன் தன் வீரத்தால் சேர நாட்டை விரிவாக்கினான். மலையாளம், கொச்சி, திருவாங்கூர் என்று வழங்கும் கேரள ராஜ்யந்தான் சேர நாடு. அதன் தலைநகரம் வஞ்சி. அந்துவன், தன் படைப்பலங்கொண்டு மலைநாட்டுக்கு மேற்கே உள்ள கொங்கு நாட்டையும் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டான். கொங்கு நாட்டின் கிழக்கு எல்லையில் கருவூர் என்ற

நகரம் இருக்கிறது. இப்போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சேர்ந்திருக்கிறது. அந்த நகரத்தில் சேரன் ஓர் அரண்மனை கட்டினான். சில காலம் கருவூருக்கு வந்து, அந்த அரண்மனையில் தங்குவான். அரண்மனையில், மேலே அவனுடைய அரசிக்குரிய மாளிகை இருந்தது.

ஒரு சமயம் அந்துவன் கருவூருக்கு வந்து தங்கியபோதுதான் இந்த நிகழ்ச்சி நடந்தது. அவன் அரசியின் மாளிகையின் மேல் மாடத்தில் திறந்த வெளியில் கிழக்கு நோக்கி நின்றுகொண் டிருந்தான். அவனுடன் மோசியார் என்ற புலவரும் இருந்தார். அவர் முடவராதலால் முடமோசியார் என்று சொல்வார்கள். முடம் என்பதை யாரும் குறைவாக நினைக்காமல் அவரிடம் தமிழ் மக்கள் மதிப்பு வைத்துப் பாராட்டினார்கள். அவரும் சேர அரசனோடு அங்கே இருந்தார்.

அந்துவன் நெடுந்தூரத்தில் ஒரு யானை வேகமாக ஓடி வருவதையும் அதற்குப் பின்னால் ஆயுத பாணிகளாகப் பலர் வருவதையும் கண்டான். கருவூரின்மேல் யாராவது படையெடுக்க வந்து' விட்டார்களா? யானையின்மேல் இருப்பவன் யார்? எதற்காகத் துரத்துகிறார்கள்?—சேர அரசனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

அருகில் இருந்த புலவரான மோசியாரைப் பார்த்து, "அதோ பாருங்கள் ஒரு யானையை. அதன்மேல் யாரோ தெரியவில்லையே!" என்றான். புலவர் பார்த்தார். அவருக்கு உண்மை விளங்கிவிட்டது. யானை உறையூரிலிருந்து வருகிறது என்பதை உணர்ந்து கொண்டார்.


புலவர் முடமோசியாரும் உறையூரில் வாழ்கிறவர். பெரிய நகரங்களில், மேலே ஏறிப் பார்த்தால் ஊர் முழுவதும் நன்றாகத் தெரிவதற்குரிய கோபுரம் ஒன்று இருக்கும். அதை நகர் காண் ஏணி என்பார்கள். உறையூரில் அந்த ஏணி இருந்த இடத்தை ஏணிச்சேரி என்று சொன்னார்கள். அவ்விடத்தில் மோசியார் வாழ்ந்து வந்தார். அரசர்களுக்குள் நட்பானாலும் பகையானாலும் புலவர்களிடம் அதைக் காட்ட மாட்டார்கள். போர் நடந்து கொண்டிருந்தாலும் புலவர்கள் ஒரு நாட்டிலிருந்து அதற்குப் பகையான நாட்டுக்குப் போவார்கள். அவர்களை யாரும் ஏதும் செய்ய மாட்டார்கள். தமிழ்ப் புலவர்களிடம் அக்காலத்து மன்னர்களுக்கும் மக்களுக்கும் அவ்வளவு மதிப்பு இருந்து வந்தது.

கோப்பெருநற்கிள்ளி என்னும் சோழன், வழக்கம்போல் அன்று பட்டத்து யானையின்மேல் ஏறி, ஊர்வலம் வந்தான். திடீரென்று யானைக்கு மதம் பிடித்துவிட்டது. அது வேகமாக மேற்குத் திசையில் ஓடத் தொடங்கியது. யானையின்மேல் பாகனும் சோழனும் அமர்ந்திருந்தார்கள். யானை, கட்டுக்கு அடங்காமல் ஓடுவதைக் கண்டு, உடன் இருந்த வீரர்கள் ஆயுதமும் கையுமாக அதைத் துரத்திக்கொண்டு வந்தார்கள். ஓடி இளைத்துப் போனார்கள். ஆயினும் அங்கங்கே இருந்த மக்கள், வாளோடும் வேலோடும் துரத்தி வந்தார்கள். யானை, சோழ நாட்டு எல்லையையே கடந்து வந்துவிட்டது. சேர நாட்டைச் சார்ந்திருந்த கருவூர் எல்லைக்குள் புகுந்தது. அப்போதுதான் சேர அரசன் பார்த்தான்.

உறையூர்க்காரராகிய புலவர் முடமோசியாருக்கு யானையின் மேல் இருப்பவன் சோழன் என்று தெரிந்துவிட்டது. யானையின் நிலையைக் கண்டு, அது மதம் பிடித்து ஓடி வருகிறது என்பதையும் உணர்ந்துகொண்டார்.

சேரனும் சோழனும் நண்பர்களாகப் பழகாத காலம் அது. வேற்று அரசன் அழைப்பு இன்றியும் காரணம் இன்றியும் அயல் நாட்டில் புகுவது முறையன்று. சோழனோ வாள்வீரர்களோடு வருகிறான். அந்த நிலையில் நிச்சயமாகச் சேர மன்னன் அவனைக் கைப்பற்றிச் சிறையில் அடைத்துவிடுவான். அப்படிச் செய்வது அரசியலின்படி தவறான காரியம் அல்ல.

முடமோசியார் சோழனைக் காப்பாற்ற வேண்டும் என்று நிச்சயம் செய்துகொண்டார். சேரன், "இவன் யாரோ?" என்று கேட்ட போது மோசியார் விடை கூறவில்லை. யானையையும் அதன்மேல் இருந்தவனையும் உற்றுப் பார்த்தார். மறுபடியும் சேரன், "யார் என்று தெரிகிறதா?" என்று கேட்டான்.




"பாவம்! தர்ம சங்கடமான நிலையில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறான் இவன். புலித்தோலால்

செய்த சட்டையை அணிந்திருக்கிறான். அதில் அம்பு பட்ட தொளைகள் இருக்கின்றன. உண்மையான வீரன்."

"இங்கே எதற்கு வருகிறான்? பின்னாலே ஆயுதங்களோடு வருகிறவர்கள் யார்?"

"பெரிய கடலிலே கப்பல் வருகிறதுபோல வருகிற இந்தக் களிறு, இயற்கையான நிலையில் இல்லை. அதற்கு மதம் பிடித்திருக்கிறது. அதைத் தடுத்து வசப்படுத்துவதற்காக அந்த வீரர்கள் வருகிறார்கள். அவர்களால் அடக்க முடியவில்லை. வேண்டுமென்று இவன் இங்கே வரவில்லை, பாவம்! அயல் நாடு என்று தெரிந்தும் இந்த நிலையில் அவன் என்ன செய்வான்! அவனுக்கு ஒரு தீங்கும் வராமல் சௌக்கியமாக ஊருக்குப் போய்ச் சேர வேண்டும்."



"அவன் ஊர் எது?"

"எங்கே பார்த்தாலும் வயல்கள் பரந்து கிடக்கும் சோழ நாட்டுக்கு உரியவன் அவன். உறையூரிலிருந்து யானை அவனை இங்கே தூக்கிக்கொண்டு வந்துவிட்டது."

"அப்படியென்ருல் இவன் சோழ......"

"ஆம்; சோழ அரசன் கோப்பெருநற்கிள்ளிதான்!"

சேரன் நிமிர்ந்து நின்று பார்த்தான். சற்றே கனைத்துக் கொண்டான். "உங்களுக்குத் தெளிவாகத் தெரியுமா?" என்ருன்.

"உறையூர்காரனுக்குத் தெரியாதா? இவன் கருவூருக்குள் முறை தவறி வரக்கூடியவன் அல்ல. யமன்கையில் பட்ட உயிரைப்போல இந்த யானையினிடம் அகப்பட்டுக்கொண்டான். சேர மன்னனுடைய எல்லைக்குள்ளே வந்துவிட்ட செய்தியை அவன் அறிந்தாரு அறியவில்லையோ? யான் அறியேன். ஏதோ அவனுக்குப் போதாத காலம்! நல்ல வேளையாக இப்போது மன்னர் பெருமான் இங்கே நின்று, இவனைப் பார்க்கும் சமயமாக இருக்கிறது. வஞ்சிமா நகரத்தில் தாங்கள் இருக்கும்போது இப்படி நேர்ந்தால் இவனை இங்குள்ள அதிகாரிகள் எளிதில் விட்டுவிடுவார்களா? தம்முடைய ஆற்றலுக்கு உட்படாத இத்தகைய சந்தர்ப்பம் ஒவ்வொரு வாழ்க்கையிலும் நிகழ்வது உண்டு. அப்படி நேரும்போது, மற்றவர்கள் பெருந்தன்மையோடு நடந்துகொண்டால் அந்தச் சமயங்களில் கேடு இல்லாமல் தப்பலாம். சோழன் யாதொரு கேடும் இன்றி, ஊருக்குத் திரும்பிப் போய்ச் சேருவான் என்றே நான் நம்புகிறேன்" என்று பேசி முடித்தார் மோசியார்.

புலவருடைய குறிப்பை அந்துவஞ்சேரல் உணர்ந்துகொண்டான். அவனை வரவேற்ருன். அவனுடன் உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரும் இருந்து, புன்னகையுடன் வரவேற்ருர்.

'அயல் நாட்டுக்குள் முறையின்றி வந்துவிட்டோமே! என்ன ஆகுமோ!' என்று அஞ்சிக் கிடந்த சோழனுக்கு, முடமோசியாரைக் கண்டவுடன் உயிர் வந்தது.

ஒரு நாள் சேரனுடைய விருந்தாளியாக இருந்த சோழன், மறுநாளே உறையூர் போய்ச் சேர்ந்தான். சேர்ந்தது முதல், 'முடமோசியார் எப்போது வருவார், எப்போது வருவார், எப்போது வருவார்?' என்று வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தான். அவரால் உயிர் பிழைத்தவன் அல்லவா? தன் நன்றியறிவைக் காட்ட வேண்டாமா?

# உரை வகுத்த நக்கீரர்

மதுரையில் திடீரென்று பஞ்சம் வந்துவிட்டது. மழை பல காலமாகப் பெய்யவில்லை. பாண்டிய அரசன் பஞ்ச காலத்தில் உணவுப் பொருளைப் பகிர்ந்து கொடுக்க ஏற்பாடு செய்தான். அக்காலத்தில் அவன் மதுரையில் ஒரு தமிழ்ச் சங்கத்தை நடத்தி வந்தான். அதில் புலவர்கள் இருந்து தமிழாராய்ச்சி செய்து வந்தார்கள். அந்தப் புலவர்களுக்குப் பஞ்ச காலத்தில் வழக்கம் போல வேண்டிய வசதிகளைச் செய்து தர முடியாதோ என்று அவன் வருந்தினான். அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. 'புலவர்கள் எங்கே போனாலும் சிறப்புப் பெறுவார்கள். இந்தக் கஷ்ட காலத்தில் நாமும் நம்முடைய குடி மக்களும் வசதிகளைக் குறைத்துக்கொண்டு வாழத்தான் வேண்டும். இவர்கள் வளமுள்ள நாட்டில் போய் வாழலாமே! பிறகு நாடு, மீட்டும் வளம் பெறும்போது நாம் அழைத்து வரலாம்' என்று எண்ணித் தன் கருத்தைப் புலவர்களுக்குத் தெரிவித்தான். அவர்கள் அப்படியே வெவ்வேறு நாடுகளுக்குச் சென்றுவிட்டார்கள்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பஞ்சம் நீங்கியது. உடனே, பாண்டியன் அங்கங்கே உள்ள புலவர்களுக்கு ஆள் விட்டு, அழைத்து வரச் செய்தான். மீட்டும் சங்கத்தை நடத்தி வந்தான். புலவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் வல்லவர்களாக இருந்தனர். தமிழ் இலக்கணத்தில் எழுத்து, சொல், பொருள் என்று மூன்று பெரும் பிரிவுகள் உண்டு. அவற்றில் பொருள் இலக்கணத்தில் அகப்பொருள் என்றும் புறப் பொருள் என்றும் இரண்டு பிரிவுகள். அகப்பொருள் இலக்கணத்தை நன்றாக ஆராய்ச்சி செய்து, புலவர் ஒருவரைக் கொண்டு, புது முறையில் ஓர் அகப்பொருள் இலக்கணத்தை இயற்றச் செய்ய வேண்டுமென்று பாண்டியன் எண்ணியிருந்தான். ஆனால் அவ்விலக்கணத்தில் ஆழ்ந்த பயிற்சி உடையவராக ஒரு புலவரும் வரவில்லை; அதனால் அரசனுக்கு ஏமாற்றம் உண்டாயிற்று. 'நம்முடைய விருப்பம் நிறைவேறாமற் போய்விடுமோ!' என்று எண்ணி ஏங்கினான். தன் குலதெய்வமாகிய சொக்கநாதரிடம் தன் குறையை முறையிட்டுக்கொண்டான்.

ஒரு நாள் கோயிலில் இறைவன் எழுந்தருளியிருக்கும் பீடத்துக்கு அருகில், சில செப்பேடுகள் இருந்ததைக் குருக்கள் கண்டார்.

திடீரென்று அவை அங்கே எப்படி வந்தன என்று அவருக்குத் தெரியவில்லை. அவற்றை எடுத்து வைத்து, அரசனிடம் தெரிவித்தார். பாண்டியன், 'இது ஏதோ இறைவன் திருவருளால் நேர்ந்த அற்புதம்!' என்று எண்ணி, அவற்றை வாங்கிப் படித்துப் பார்த்தான். பார்த்தபோது அவனுடைய வியப்பு ஆயிரம் மடங்காயிற்று. அந்தச் செப்பேடுகளில் ஓர் இலக்கண நூலைக் கண்டான். சரியாக அறுபது சூத்திரங்கள் அடங்கிய நூல்; அகப்பொருளின் இலக்கணத்தைச் சொல்வது.

பாண்டியன் ஆனந்தக் கூத்தாடினான். தன் விருப்பம் நிறைவேறியதை எண்ணி இன்புற்றான். உடனே அந்தத் தாமிரத் தகடுகளைக் கொண்டுவந்து, தமிழ்ச் சங்கப் புலவர்களிடம் காட்டி, "இது இறைவன் திருவருளால் கிடைத்தது; பாருங்கள். இந்த நூலுக்கு உரை எழுதுங்கள்" என்று சொன்னான். அவர்களும் அதைப் படித்துப் பார்த்து, அது புது முறையான அகப்பொருள் இலக்கணமாக இருப்பதைக் கண்டு, அளவில்லாத மகிழ்ச்சியை அடைந்தார்கள். பாண்டியன் விருப்பப்படியே உரை எழுதத் தொடங்கினார்கள்.

அக்காலத்தில் தமிழ்ச் சங்கத்தில் 49 புலவர்கள் இருந்தார்



கள். எல்லோரும் சேர்ந்து உரையை எழுதவில்லை. ஆளுக்கு ஓர் உரையை எழுதினார்கள். எல்லோரும் உரைகளை எழுதிய பிறகு பாண்டியனுக்குத் தெரிவித்தார்கள்.

அரசனுக்கு இப்போது ஒரு புதிய சங்கடம் உண்டாகி விட்டது. நாற்பத்தொன்பது உரைகளை வைத்துக்கொண்டு என்ன செய்வது? ஏதாவது ஒன்று இருந்தால் போதுமே! நாற்பத்தொன்பதும் பெரும் புலவர்கள் எழுதிய உரைகள். அவற்றில் எதைப் பொறுக்கி எடுப்பது? எப்படித் தேர்ந்தெடுப்பது? அரசனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

கோயிலுக்குப் போய்ச் சொக்கநாதரைத் தொழுதான். "சுவாமி, அகப்பொருள் இல்லை என்று கவலைப்பட்டேன். நீயே ஒரு நூலை அருள் செய்தாய். இப்போது அந்த நூலுக்கு நாற்பத்தொன்பது உரைகள் வந்திருக்கின்றன. ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். புலவர்களுக்கு மன வேறுபாடு இல்லாமல் சிறந்த ஒன்றைத் தேர்ந்தெடுக்க ஒரு வழியும் தெரியவில்லை. மூல நூலை அருளிய நீயே இதற்கும் ஒரு வழியை அருள் செய்ய வேண்டும்" என்று வேண்டிக்கொண்டான்.

அவன் அன்பையும் குறையையும் உணர்ந்த இறைவன், அசரீரியாக, "இவ்வூர் வணிகர் தெருவில் உப்பூரி குடி கிழார் என்று ஒருவர் இருக்கிறார். அவருக்கு ஒரு குழந்தை பிறந்திருக்கிறான். அவனுக்கு ருத்திரசன்மன் என்று பெயர். அவன் முருகனுடைய அம்சமுடையவன்; ஊமை. அவனை அழைத்து வந்து, உயர்ந்த ஆசனத்தில் அமரச் செய்து வழிபடு. பிறகு புலவர்களைத் தாம் எழுதிய உரைகளைப் படிக்கும்படி சொல். யாருடைய உரையைக் கேட்டு, மகிழ்ச்சி அடைந்து அவன் மெய்ம்மயிர் சிலிர்க்கிறானோ, அந்த உரையே சிறந்தது என்று அறிந்துகொள்ளலாம்" என்று அருளினான். பாண்டியன் மகிழ்ந்து, இறைவனை வணங்கி, விடை பெற்றுச் சென்றான்.

புலவர்களிடம் இந்தச் செய்தியைத் தெரிவித்தான். வணிகர் தெருவில் விசாரித்து, ருத்திரசன்மன் என்ற பையன் இருப்பதைத் தெரிந்துகொண்டான். ஒரு நல்ல நாளில் அவனை உபசாரத்துடன் அழைத்து வரச் செய்தான். புதிய ஆடையை அணிவித்து, வெண் மலர் மாலை புனைந்து, உயர்ந்த ஆசனத்தில் அமர்த்தினான். புலவர்கள் தம் உரைகளோடு அங்கே வந்து அமர்ந்துகொண்டார்கள்

உரையின் அரங்கேற்றம் தொடங்கியது. ஒவ்வொரு புலவரும் தம் தம் உரையைப் படிக்கலாயினர். யாவரும் கேட்டுக்கொண்டிருந்தனர். ருத்திரசன்மன் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தான். பாண்டியனுக்குக் கவலை உண்டாகிவிட்டது.

'அசரீரி வாக்கை நம்பி, இந்த ஊமைப் பிள்ளையைக் கொண்டு வந்து, இங்கே அமர்த்தியிருக்கிறோம்! இவன் கற்சிலைபோல் அல்லவா இருக்கிறான்! என்ன ஆகுமோ, தெரியவில்லையே!' என்ற எண்ணந்தான் அந்தக் கவலைக்குக் காரணம்.

இன்னும் சிலர் தம் உரைகளைப் படித்தனர். பிறகு மருதன் இளநாகனார் என்னும் புலவர் படித்தார். அப்போதுதான் அந்த ஊமைப் பிள்ளை சிறிது உடம்பை அசைத்தான். முறுவல் பூத்தான். அதைப் பார்த்துப் பாண்டியனுக்கு நம்பிக்கை உதயமாயிற்று. மறுபடியும் அந்தப் பிள்ளை சும்மா இருந்தான்.

அப்பால் நக்கீரர் தம் உரையைப் படிக்கத் தொடங்கினார். அப்போது ருத்திரசன்மன் அடிக்கடி கண்ணீர் விட்டான். கையைத் தட்டினான், உடம்பெல்லாம் புல்லரித்தது. சில சமயங்களில் முறுவல் பூத்தான். மற்றப் புலவர்கள் படித்தபோது உண்டாகாத உணர்ச்சி, அப்போது அவனுக்கு உண்டாயிற்று. அதனால் நக்கீரர் உரையே எல்லா உரைகளிலும் சிறந்தது என்பதை யாவரும் ஒப்புக்கொண்டார்கள். உண்மையில் அது பல வகையிலும் சிறப்பாக இருந்தது. பாண்டியன் நக்கீரருக்குப் பரிசுகளை வழங்கினான்.

இறைவன் அருளால் அகப்பட்ட அந்த நூலுக்கு, 'இறையனார் அகப்பொருள்' என்ற பெயர் உண்டாயிற்று. அதைக் களவியல் என்றும் சொல்வதுண்டு. நக்கீரர் எழுதிய உரை, பின்பு எங்கும் வழங்கலாயிற்று. இன்றும் அந்த அகப்பொருள் இலக்கணமும் அதன் உரையும் இருக்கின்றன.

உரை எழுதிச் சிறப்புப் பெற்ற நக்கீரர் பெரிய புலவர். அவருடைய தகப்பனார் பள்ளிக்கூடத்து ஆசிரியர். ஆசிரியரைக் கணக்காயர் என்றும் அக்காலத்தில் சொல்வார்கள். அந்த ஆசிரியரிடம் எல்லோருக்கும் பெரிய மதிப்பு இருந்து வந்தது. அவர் பெயரைக்கூடச் சொல்லாமல், 'மதுரைக் கணக்காயனார்' என்றே சொல்லி வந்தார்கள். அவர் பிள்ளையாகையால் நக்கீரரை,

'மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்' என்றே வழங்கினார்கள்.

'வில்லுக்குச் சேரன், சொல்லுக்குக் கீரன்' என்றது நக்கீரரைத்தான். அவர் பல பாடல்களைப் பாடியிருக்கிறார். முருகக் கடவுளைப்பற்றித் திருமுருகாற்றுப் படை என்ற நீண்ட பாட்டை அவர் இயற்றியிருக்கிறார். அவர் பாடிய மற்றப் பாடல்களை அறிந்தவர்கள் குறைவாக இருந்தாலும், திருமுருகாற்றுப் படையைப் படித்தவர்கள் இன்றும் பலர் இருக்கிறார்கள். அதை ஒவ்வொரு நாளும் பக்தியோடு பாராயணம் செய்பவர்களும் இருக்கிறார்கள்.

# காக்கையைப் பாடின பெண்

நல்லதங்கை என்று நீங்கள் கேட்டிருக்கிறீர்கள் அல்லவா? பழைய காலத்தில் அப்படி ஒரு நாடகம் நடக்கும். நல்லதம்பி, நல்லண்ணன் என்ற பெயர்களைப்போல நல்ல என்ற சிறப்போடு கூடிய பெயர் நல்லதங்கை. மிகவும் பழங்காலத்திலும் நல்ல தங்கை என்ற பெயர் இருந்துவந்தது. அதே பெயர் இல்லா விட்டாலும் அந்த அர்த்தத்தை உடைய பெயர் இருந்தது. செள்ளை என்பது தங்கைக்குப் பெயர். இப்போது அது தமிழில் மறைந்து போய்விட்டது. செல்லலு என்று தங்கையைக் குறிக்கத் தெலுங்கில் ஒரு சொல் வழங்குகிறது. நச்செள்ளை என்பது ஒரு பெயர். நல்லதங்கை என்பதுபோன்ற பெயர்தான் அது. ந என்பது பெருமையைக் காட்டுவது.

நச்செள்ளை என்ற பெயரோடு ஒரு பெண் புலவர் இருந் தார். சின்ன வயசிலேயே அவருக்குக் கவி பாடும் திறமை உண் டாகிவிட்டது. ஒரு பெண்ணினுடைய கணவர் வெளியூருக்குப் போனார். போய்க் கொஞ்சகாலம் ஆயிற்று. வியாபாரமோ தொழிலோ செய்து பணம் சம்பாதித்து வரத்தான் போனார். கொஞ்ச நாளாகவே அவருடைய மனைவிக்குச் சிறிது வருத்தம் உண்டாயிற்று. 'போனவர், இன்னும் வரவில்லையே! எப்போது வருவாரோ!' என்று மிகவும் வருத்தப்பட்டுக்கொண் டிருந்தாள்.

அப்போது நச்செள்ளையார் அங்கே வந்தார். அவர் சின்னப் பெண்ணாக இருந்த காலம் அது. கணவனை எண்ணி வருத்தப் பட்டுக்கொண் டிருந்த அந்தப் பெண்மணியைப் பார்த்து, ஆறுதல் சொன்னார். அப்போது ஒரு காக்கை விடாமல், 'கா, கா!' என்று கரைந்துகொண்டே இருந்தது. காக்கை கரைந்தால் யாராவது உறவினர் வீட்டுக்கு வருவார்கள் என்று சொல்வார்கள். அது நச் செள்ளையாருக்குத் தெரியும். அதனால், வருந்தின பெண்மணி யைப் பார்த்து, 'இதோ பார்; காக்கை கரைகிறது. உன் கணவர் இன்றாவது நாளையாவது நிச்சயமாக வந்துவிடுவார். நீ வருத்தப் படாதே. அவரை வரவேற்கச் சித்தமாக இரு' என்று சொன் னார்.

அவர் சொன்ன வாக்குப் பலித்தது. அன்று மாலையே ஊருக் குப் போயிருந்தவர் வந்துவிட்டார். அவருடைய மனைவியும் வருத்

தம் நீங்கினுள். காக்கை பாடினியார் வாக்குப் பலித்ததைப் பாராட்டிப் புகழ்ந்தாள்.

அவளுடைய கணவர், "நீ நான் வரவில்லையே என்று மிகவும் வருத்தம் அடைந்தாயோ?" என்று கேட்டார். அப்போது அருகில் இருந்த நச்செள்ளையார், "அதை ஏன் கேட்கிறீர்கள்? எப்போதும் முகத்தில் ஒளியில்லாமல் வாட்டமுற்று இருந்தாள்.



நல்ல வேளை! காக்கை கரைந்தது. அதைக் காட்டி நான் ஆறுதல் சொன்னேன்" என்றார்.

"அப்படியா? அப்படியானால் அவளுக்கு ஆறுதல் கூறிய உங்களுக்கு நான் மிக்க நன்றி கூறவேண்டும்" என்றார் அந்த ஆடவர்.

"எனக்கா? சகுனம் சொல்லிய காக்கைக்குத்தான் நன்றி கூறவேண்டும். அது கரைந்ததைக் காட்டியல்லவா நான் ஆறுதல் சொன்னேன்" என்று சொன்ன நச்செள்ளையார் உடனே அந்தக் காக்கையைப் பாராட்டி ஒரு கவியைப் பாடினார்.

அக்காலத்தில் நள்ளி என்ற பெரிய மனிதர் ஒருவர் இருந்தார். அவர் பெரிய உபகாரி. அவருக்கு ஒரு நாடே சொந்தமாக இருந்தது. அந்த நாட்டில் நிறையக் காடுகள் இருந்தன. பல பசுக்கள் காடுகளில் வளர்ந்தன. அந்தக் காட்டில் உள்ள பசுவின் நெய்க்கு உள்ள மணமே தனி.

சோழ நாட்டில் தொண்டி என்று ஓர் ஊர் இருக்கிறது. அங்கே வயல்கள் மிகுதியாக இருக்கின்றன.

நச்செள்ளையார் காக்கையைப்பற்றிப் பாடின கவியில் நள்ளிக்குச் சொந்தமான காட்டுப் பசுவின் நெய்யையும் தொண்டியில் விளையும் நெல்லையும் சொல்லியிருக்கிறார். அதனால்தான் அவற்றைப்பற்றி இங்கே சொன்னேன்.

'நல்ல சகுனமாகக் கரைந்த காக்கைக்கு நல்ல சோற்றைப் போடவேண்டும். நம்முடைய நன்றியறிவைக் காட்டவேண்டும் அல்லவா?' என்று அந்தப் பெண் புலவர் சொல்கிறார். எப்படிப் போடவேண்டும் என்பதை அழகாகச் சொல்கிறார்.

'பலமான தேரிலே போகிற நள்ளி இருக்கிறானே, அவனுடைய காட்டில் ஆயர்கள் பலர் வாழ்கிறார்கள். அவர்கள் பசுமாடுகளை நன்றாக வளர்க்கிறார்கள். பால் கறந்து, பிறகு வெண்ணெய் எடுத்து, நெய் காய்ச்சுகிறார்கள். அங்கே போய்ச் சுத்தமான நெய்யை வாங்கிவர வேண்டும். எதற்குத் தெரியுமா? நல்ல நெய்ப்பொங்கல் பண்ணுவதற்குத்தான். பிறகு, தொண்டியில் நன்றாக விளைந்த நெல்லை வாங்கிவர வேண்டும். அங்கேதான் மட்டையாக இராமல் அரிசி வெளுப்பாகக் கிடைக்கும். அந்த அரிசியைச் சமைத்து, நிறைய நெய்விட்டுச் செய்த பொங்கலை, இந்தக் காக்கைக்குக் கொடுக்கவேண்டும். சமைத்தவுடனே, 'கா, கா' என்று காக்கைக்குச் சோற்றை இரைக்கிறோமே, அப்படிப் போடக்கூடாது. பாத்திரத்தில் கிளிக்கு ஏந்துவதுபோல ஏந்த வேண்டும். ஒரு பாத்திரத்தில் அல்ல, ஏழு பாத்திரங்களில் ஏந்தினாலும், அது செய்த உபகாரத்துக்கு ஈடாகாது. சிறிதென்றே சொல்லவேண்டும். அது செய்த நன்றி சிறிதா? என் தோழி உங்கள் பிரிவினால் மிகவும் வாடிப்போனாள். இவளுடைய பெரிய தோள் மெலிந்து போயிற்று. அப்படி மெலிந்த வருத்தம் நீங்கும்படியாக, விருந்தாளி வருவார் என்பதைத் தெரிந்து கொள்ள இந்தக் காக்கை கரைந்தது. அதற்குப் பலியாக ஏழு பாத்திரத்தில் நெய்ப் பொங்கலை ஏந்தினாலும் சிறிதுதான்.''

இப்படி ஒரு பாட்டை நச்செள்ளையார் பாடினார். அதைக் கேட்ட அந்த மனிதரும் அவருடைய மனைவியும் வியப்பில் ஆழ்ந்தனர். மற்றவர்களுக்கும் இந்தச் சிறிய பெண் இவ்வளவு அழகான பாட்டைப் பாடியதைக் கண்டு ஆச்சரியம் உண்டாயிற்று. ஊரே புகழ்ந்தது. புலவர்களும் பாராட்டினார்கள். முதல் முதலாகக் காக்கையைப் பாடிய நச்செள்ளையாருக்குக் காக்கை பாடினியார் என்ற பட்டப் பெயர் உண்டாயிற்று. காக்கை பாடினியார் என்று தனியாகவோ, காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்று சொந்தப் பெயருடன் சேர்த்தோ மக்கள் அவரைக் குறிக்கத் தொடங்கினார்கள்.

பிறகு அவர் பல பாடல்களைப் பாடினார். சேரன் அரசாண்டிருந்த சேர நாட்டுக்குச் சென்றார். அப்போது ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் என்ற அரசன், சேர நாட்டை ஆண்டு கொண்டிருந்தான். அவனிடம் சென்று, அவனைப் பாராட்டி, பத்துப் பாடல்களைப் பாடினார். அவற்றைக் கேட்ட மன்னன் மிகவும் மகிழ்ந்து, ஒன்பது துலாம் பொன்னும் லட்சம் பொற்காசும் வழங்கினான். "நல்ல ஆபரணம் செய்து போட்டுக்கொள்ளுங்கள்" என்று சொல்லி அந்தப் பொன்னை அளித்தான்.

அதுமுதல் காக்கை பாடினியாருடைய புகழ் அதிகமாயிற்று. அவர் மதுரைக்கும் சென்று, அங்கே உள்ள சங்கப் புலவர்களைப் பார்த்துப் பழகினார். பாண்டிய மன்னனைக் கண்டு, தம் புலமையை வெளிப்படுத்திப் பரிசு பெற்றார்.

கவி பாடுவதிலே சிறந்த காக்கை பாடினியார், கவியின் இலக்கணம் நன்றாகத் தெரிந்தவர். கவியின் இலக்கணத்தை யாப்பிலக்கணம் என்று சொல்வார்கள். மிகவும் படித்த பெரிய புலவர்களே இலக்கணத்தை இயற்றும் அறிவைப் பெறுவார்கள்.

காக்கை பாடினியார் ஒரு யாப்பிலக்கணத்தை இயற்றினார். அது அவர் பெயராலேயே, 'காக்கை பாடினியம்' என்று பெயர் பெற்றது. தொல்காப்பியர் இயற்றியது தொல்காப்பியம். அகத்தியர் இயற்றியது அகத்தியம். அதைப்போலக் காக்கை பாடினியார் இயற்றியது காக்கை பாடினியம்.

முதல் முதலில் காக்கையைப் பாடத் தொடங்கிய நச்செள்ளை, இலக்கணம் இயற்றும் நிலைக்கு உயர்ந்து, சிறந்து நின்றார் என்றால் பழைய காலத்தில் பெண்களுக்கும் எவ்வளவு பெருமை இருந்தது என்பது தெரியவரும்.

# மாடு பெற்ற புலவர்

சோழ நாட்டில் உறையூரில் கிள்ளி வள்வன் என்ற சோழ அரசன் செங்கோல் ஓச்சி வந்தான். அவனுக்குத் தமிழ்ப் புலவ ரிடம் மிக்க அன்பு. எந்தக் காரியம் இருந்தாலும் அதை விட்டு விட்டுத் தமிழ்ப் புலவர்களுக்கு உபசாரம் செய்வான். அவனைச் சார்ந்தவர்களும் அரண்மனைக்கு எந்தத் தமிழ்ப் புலவர் வந் தாலும் வரவேற்று, உபசரித்து, அரசனிடம் அழைத்துச் செல்வார் கள்.

ஐயூர் என்பது சிறிய ஊர். அங்கே ஒரு புலவர் இருந்தார். அவர் பெரிய புலவர்; பெருங் கவிஞர். ஆனால் காலில்லா முடவர். அவர் தம் விருப்பப்படி பல இடங்களுக்குச் செல்ல முடியா விட்டாலும், அவருடைய பாட்டு பல ஊர்களுக்குச் சென்று பரவியது. அவற்றைக் கண்ட மக்கள் அவற்றில் உள்ள சுவையை உணர்ந்து, புலவரைப் பாராட்டினார்கள். ஐயூர்ப் புலவர் என்றே யாவரும் அவரை அழைத்தார்கள். அவருக்குப் பெற்றோர் வைத்த பெயரை யாரும் சொல்வதில்லை! அவ்வளவு மரியாதை அவரிடம்; கடைசியில் அவருடைய சொந்தப் பெயரே மறைந்துபோயிற்று. ஐயூர் கிழார் அல்லது ஐயூர் முடவனார் என்றே அவரை எல் லோரும் குறிப்பிட்டுப் பேசினார்கள். கால் முடம் என்பதனால் அவருக்கு எந்த விதமான குறைபாடும் இருக்கவில்லை, அவராகச் செய்துகொண்ட தல்லவே அது? குணத்தில் குறைபாடு இருந் தால் இழிவாக நினைப்பார்கள். அங்கக் குறைவினால் ஒருவரை இழிவாகச் சொல்லுவது அக்காலத்து மக்களுக்கு வழக்கம் இல்லை. ஐயூர் முடவனார் என்று வழங்கும்போது மரியாதையாகவே சொன்னார்கள்.

புலவருக்கு வெளியூர்களுக்குச் செல்ல வேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று. எவ்வளவுதான் சிறந்த புலவராக இருந் தாலும் பெரிய அரசர்களின் சபைகளுக்குச் சென்று, மற்றப் புல வர்களோடு சேர்ந்துகொண்டு தம்முடைய புலமையைக் காட்டி னால்தான் பெருமை வளரும்; அவருக்கும் திருப்தி உண்டாகும்.

சிறிய ஊரில் அடைந்துகொண் டிருப்பதை அந்தப் புலவர் விரும்பவில்லை. அவரை யாரேனும் புலவர்கள் வந்து பார்த்துப் போவார்கள். தமிழ் நாட்டில் இன்ன இன்ன மன்னர் இப்படி இப்படி இருக்கிறார்கள் என்ற செய்தி அவர்கள் மூலமாக அவருக்

குத் தெரிய வந்தது. உறையூரில் இருந்த கிள்ளி வளவனுடைய பெருமையை அவர் அறிந்துகொண்டார்.

பொன்னும் பொருளும் குவித்துக்கொண்டு வாழவேண்டும் என்று அவர் விரும்பவில்லை. ஆயினும் இன்றியமையாத பொருள்களுக்குக் குறைவு இல்லாமல் வாழவேண்டும் என்பது அவர் ஆசை. வெளியூர்களுக்குச் சென்று, நாலு செல்வர்களைப் பார்த்துத் தம் புலமையைப் புலப்படுத்தினால்தானே பரிசு கிடைக்கும். பரிசு மட்டுமா? புகழும் உண்டாகும் அல்லவா? தமிழ் நாட்டில் சேர சோழ பாண்டியர்கள், தமிழ்ப் புலவர்களைப் பாதுகாத்துப் புகழ்பெற்றார்கள். அங்கங்கே சிற்றரசர்கள் பலர் இருந்தார்கள். செல்வர்கள் பலர் இருந்தார்கள். அவர்கள் எல்லாரையும் போய்ப் பார்ப்பது, உடல் வலிமையுடைய புலவர்களுக்கே அரிய காரியம். முடவராகிய புலவர் எப்படிப் பலரிடம் போய்வர முடியும்!

பேசாமல் இருப்பதனாலும் அவர் வறுமை நிலை மாறாது. சோழனிடம் சென்று அவனைப் பாடினால் அவன் பரிசளிப்பான். அதை வைத்துக்கொண்டு வாழலாம்; மற்றவர்களிடம் செல்ல வேண்டிய அவசியம் இல்லை.

சோழ மன்னன் உறையூரில் இருக்கிறான். அங்கே போக அவரால் முடியுமா? வண்டி ஏறிப் போனால் போகலாம். வண்டி ஒன்றை அமைத்துக்கொண்டால் அவருக்கு எவ்வளவோ சௌகரியமாக இருக்கும்.



அவருடைய விருப்பத்தை அறிந்து உள்ளூர்ச் செல்வர்களும் வேறு சிலரும் அவருக்கு ஓர் அழகிய வண்டியைப் பண்ணித் தந்தார்கள். வண்டியிற் பூட்ட மாடு வேண்டுமே! அதையும் அவர்களிடமே

கேட்கப் புலவர் விரும்பவில்லை. வேறு யாரிடமேனும் சொல்லி வண்டிமாடு வாங்கலாம் என்று எண்ணினார்.

அக் காலத்தில், அவர் ஊருக்கு அருகில் தோன்றி யென்னும் மலைக்கு அருகில் தாமான் என்ற சிற்றரசன் ஒருவன் இருந்தான். தோன்றி மலைக்குச் சொந்தக்காரன் ஆகையால் அவனைத் தோன்றிக்கோன் என்று மக்கள் வழங்கினார்கள். அவனை அணுகித் தமக்கு ஒரு நல்ல காளைமாட்டைக் கொடுக்க வேண்டுமென்று கேட்கலாம் என்று புலவர் நினைத்தார். வேறு ஒருவருடைய வண்டியில் ஏறிக்கொண்டு தாமானிடம் போனார்.

அவன், புலவரை வரவேற்று உபசரித்தான்.

"உங்களைப்பற்றிக் கேள்வியுற்றிருக்கிறேன். நேரே பார்த்ததில்லை. உடம்பு மிகவும் இளைப்பாக இருக்கிறதே!" என்றான்.

"நாள்தோறும் உணவு உண்டால் உடம்பு நன்றாக இருக்கும்" என்றார் புலவர்.

"உணவு உண்ண முடியாதபடி வயிற்றில் ஏதாவது நோய் உண்டோ?" என்று கேட்டான் தோன்றிக்கோன்.

"வயிற்றில் பசி என்ற நோய் இருக்கிறது. அதற்கு மருந்து தினமும் கிடைப்பதில்லை. ஒருவேளை உணவு கிடைத்தால் அடுத்த வேளை கிடைப்பதில்லை; பட்டினிதான். இந்த வறுமை நிலையில் உடம்பு இளைப்பது வியப்பல்லவே?"

இதைக் கேட்டுத் தாமானின் உள்ளம் உருகியது. அவருக்கு உடனே நல்ல விருந்தளித்து இளைப்பாறச் சொன்னான். புலவர், தாம் வந்த காரியத்தைச் சொல்லத் தொடங்கினார். "என் வறுமையைப் போக்க வழி என்ன என்று யோசித்தேன். கிள்ளிவளவன் புலவர்களுக்கு வாரி வாரி வழங்குவதாகக் கேள்வியுற்றேன். அவனை அடைந்து, என் வறுமையையும் புலமையையும் புலப்படுத்தினால் வறுமை ஒழியும், புலமை வளரும் என்று நினைக்கிறேன். என்னிடம் ஒரு வண்டி இருக்கிறது; அதில் பூட்ட எருது இல்லை. நீ ஒரு காளைமாட்டை வழங்கினால் வண்டியேறி உறையூருக்குச் செல்வது எளிதாக இருக்கும். வேறு பொருளைக் கேட்டு, உனக்குத் தொல்லை கொடுக்க விரும்பவில்லை" என்றார்.

தாமான் அதைக் கேட்டான். முன்பே அவர் நிலையை அறிந்திருந்தால் உபகாரம் செய்திருக்கலாமே என்று எண்ணி இரங்கினான்.




"இப்போதே உறையூருக்குப் போகவேண்டுமா? இன்னும் சில நாட்கள் இங்கே தங்கிச் செல்லலாமே!" என்றான். புலவர் அவன் விருப்பப்படியே தங்கினார். தாமான் அவருடைய கவிகளைக் கேட்டு இன்புற்றான்.

ஒரு நாள் புலவர் விடை கேட்டார். "உங்களுக்கு வேண்டியது விடைதானே?" என்று சொல்லி ஒரு நல்ல எருதைக் கொண்டுவந்து நிறுத்தினான். விடை என்பதற்குக் காளை மாடு என்றும் ஒரு பொருள் உண்டு. "இது போதுமா?" என்று கேட்டான். "போதும்" என்றார் புலவர்.

"இதை நீங்கள் வாங்கிக்கொண்டு போவதானால் ஒரு காரியம் செய்யவேண்டும்."

"என்ன?" என்று கேட்டார் புலவர்.

"பசுமாடுகளும் தருகிறேன். அவற்றையும் அழைத்துச் செல்லவேண்டும். அதோ பாருங்கள், அந்த மந்தையை உங்களுக்கு வழங்கிவிட்டேன்!" என்று தாமான் தோன்றிக்கோன் சொன்னதைக் கேட்ட புலவர், பிரமித்துப் போய்விட்டார்.

"என்ன! இவ்வளவுமா எனக்கு!" என்று கேட்டார்.

"உங்கள் புலமைக்கு இன்னும் கொடுக்கலாம், என் நிலைமைக்கு இவ்வளவுதான் முடிந்தது" என்று அந்த வள்ளல் பணிவோடு சொன்னான்.

ஐயூர் முடவனார் வாயடைத்துப் போனார். அவர் கேட்டது என்ன? அவன் கொடுப்பது என்ன?

அந்தக் காலத்தில் பசுக்களையே செல்வமாக நம்பியிருந்தார்கள். புலவர் இப்போது கோதனம் பெற்றார். அவற்றைக் கொண்டு சென்றார். அவ்வளவையும் அவர் என்ன செய்வார்! அவற்றைப் பிறருக்கு விற்று, உணவுப் பொருள்களை வாங்கினார்.

பல மாதங்கள் குறைவின்றி வாழ அப்பண்டங்கள் உதவின. இடையில் ஒரு நாள் தாமான் அளித்த மாட்டை, வண்டியிற் கட்டி அதில் ஏறி உறையூரை அடைந்தார். கிள்ளிவளவனைக் கண்டு அளவளாவினார்.

"இவ்வளவு காலமாக நீங்கள் இங்கே வரவில்லையே!" என்று சோழன் கேட்டான்.

"அதற்கு ஒரு தாமான் தயை வேண்டியிருந்தது" என்று சொல்லி, அவனைப்பற்றிச் சொன்னார்.

ஆயிரம் யானை தந்தாலும் அந்த முடவருக்கு ஒரு காளைமாட்டால் உண்டான நன்மை கிடைக்குமா? இதை உணர்ந்த சோழ மன்னனும் தாமானைப் பாராட்டினான்.

அன்று முதல் ஐயூர் முடவனார், கிள்ளிவளவனுடைய அன்பையும் கொடையையும் பெற்றுச் சிறந்து விளங்கலானார்.

# துறவரசர் இளங்கோவடிகள்

சிங்காதனத்தில் சேரமன்னன் வீற்றிருந்தான். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பது அவன் பெயர். அவனுக்குப் பின் ஓராசனத்தில் அவனுடைய குமரர் இருவரும் அமர்ந்திருந்தனர், மூத்தவன் செங்குட்டுவன். இளையவன் பெயர் இளங்கோ என்று சொல்வார்கள். சின்ன ராஜா என்று அதற்கு அர்த்தம். மந்திரிகளும் வேறு பெரியவர்களும் அரசனுடைய அவையில் இருந்தார்கள்.

அப்போது ஜோசியம் சொல்கிறவன் ஒருவன் அங்கே வந்தான். அவனை நிமித்திகன் என்றும் சொல்வார்கள். அங்க அடையாளங்களைக் கண்டே அவன் ஒருவருடைய வாழ்க்கையைப் பற்றிய செய்திகளைச் சொல்லும் ஆற்றல் படைத்திருந்தான். அரசனிடம் தன் திறமையைக் காட்டிப் பரிசு பெறலாம் என்ற விருப்பத்தோடு அவன் அரச சபைக்கு வந்திருந்தான்.

அவன் தன்னுடைய பிரதாபங்களை எல்லாம் சொல்லிக் கொண்டான். "அந்த ஊருக்குப் போனேன். அந்த ராஜாவைக் கண்டேன். அவர் முகத்தைப் பார்த்தே ஜோசியம் சொன்னேன். இன்ன இன்ன பரிசுகளைப் பெற்றேன்'' என்று விரிவாகச் சொன்னான். சபையில் இருந்த அனைவருக்கும் தங்களைப்பற்றி ஜோசியம் கேட்க வேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று. அரசன் வீற்றிருக்கும்போது அவர்கள் எப்படிக் கேட்பது!''

ஜோசியன் சுற்று முற்றும் பார்த்தான். அரசகுமாரர்கள் இருவரும் வீற்றிருக்கும் ஆசனத்தில் அவன் பார்வை சென்றது. தேசு தவழும் முகத்தையுடைய இளைய குமாரருடைய திருமேனியைக் கூர்ந்து கவனித்தான். அவரைப்பற்றி ஜோசியம் சொல்லத் தொடங்கினான்.

"அரசே, இதோ வீற்றிருக்கிறாரே, இவருடைய அங்க அடையாளங்களைப் பார்த்தேன். இவர் ஓர் அரசுக்குத் தலைவராவார். அதற்கு ஏற்ற குறிகள் இவர் முகத்தே காணப்படுகின்றன'' என்று சொன்னான்.

அதைக் கேட்டுச் சபையில் உள்ளவர்கள் திடுக்கிட்டார்கள். 'இவன் இவ்வளவு தைரியமாகப் பேசுகிறானே! யாரிடம் எதைச் சொல்கிறோம் என்று யோசித்துப் பேச வேண்டாமோ!' என்று பெரியவர்கள் எண்ணினார்கள்,



மூத்த குமாரனாகிய செங்குட்டுவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டியிருந்தான் அரசன். அவனே நெடுஞ்சேரலாதனுக்குப் பின் அரசனாக வருவதற்கு உரிமை உடையவன். அதுதான் முறை. அப்படியிருக்க, அவன் தம்பிக்கு எப்படி அரசு கிடைக்கும்!

'ஒருகால் செங்குட்டுவன் குறையாயுள் பெற்றவனோ! அப்படியானால் இந்தப் பைத்தியம் அதை இவ்வளவு பேருக்கு நடுவில் சொல்லலாமோ!' என்று சிலர் கவலைப்பட்டார்கள்.

சில கணங்கள் சபையில் எவரும் ஒன்றும் பேசவில்லை. அரசனும் ஒன்றும் சொல்லவில்லை. செங்குட்டுவன் என்ன எண்ணினான் என்பதையும் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் இளங்கோவின் முகம் மாத்திரம் சிவந்தது. கண், கனலைக் கக்கியது. அவர் அந்த நிமித்திகனை நோக்கி, ''நீர் பெரிய ஆரூடம் சொல்லிவிட்டதாக எண்ணிப் பெருமை அடைய வேண்டாம். உம்முடைய ஜோசியத்தை நான் பொய்யாக்கப் போகிறேன்!'' என்று சொன்னார். அவர் குரலில் கோபம் தொனித்தது.

சபையினர், அவரையே கவனித்துக்கொண் டிருந்தார்கள். இந்தத் தர்மசங்கடமான நிலையில் அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்று எல்லோரும் காதை நெறித்துக்கொண்டு கேட்டார்கள்.



"நீர், முறை அறியாமல் கூறினீர். என் தமையனார் இருக்கும்போது நான் அரசைப் பெறுவதாவது! அப்படி எந்தக் காரணத்தாலும் நேர இடம் இராது. இதோ நான் சொல்வதை யாவரும் கேளுங்கள். நான் துறவு பூண நிச்சயம் செய்துவிட்டேன்! எனக்கும் இந்தக் குடிக்கும் உள்ள உறவு முறையையும் துறந்துவிட்டேன்! ஞானப் பேரரசைக் கைகொள்ளும் முயற்சியில் ஈடுபட்டு, தவம் புரிந்து, என் வாழ்நாளைக் கழிப்பேன். செங்குட்டுவன், இந்த நிமித்திகன் பேச்சைப் பொருளாகக் கருதவேண்டாம்!" என்று சிங்கம் முழங்குவதுபோல அவர் பேசினார். சபையில் உள்ளோர் மிக்க அமைதியுடன் அதைக் கேட்டனர். சேர அரசன் பிரமித்துப்போனான். செங்குட்டுவனோ ஒன்றும் தெரியாமல் விழித்தான்.

"இதோ இப்போதே அரசர் பெருமானிடம் விடை பெற்றுக் கொள்கிறேன். இனி எனக்கு இருப்பிடம் அரண்மனை அல்ல. இந்த மாநகரத்தின் கீழ்வாயிலில் உள்ள மடம் இருக்கிறதே, அதுவே என் வாழ்க்கை இடமாக இருக்கும்" என்று சொல்லிப் புறப்பட்டு விட்டார்.

* * *

இப்படித் துறவு பூண்டவரே இளங்கோவடிகள் என்னும் புலவர். அவர் சேரர் குலத்தில் உதித்தாலும் அரச குமாரர்களுக்குரிய இன்ப வாழ்க்கையில் ஈடுபடாமல் அதைத் தியாகம் செய்துவிட்டுத் தவ வாழ்க்கையை மேற்கொண்டார். அதனால் அவருக்கு இளங்கோவடிகள் என்ற பெயர் உண்டாயிற்று. இப்பொழு

தெல்லாம் சுவாமிகள் என்று சொல்வதில்லையா? அதே பொருள் உடையதுதான் அடிகள் என்ற சொல்லும்.

இளங்கோவடிகள் நல்ல தமிழ்ப் புலமை உடையவர். கோவலன் கண்ணகி கதையை அழகிய காவியமாகப் பாடினார். அதற்குச் சிலப்பதிகாரம் என்று பெயர். தமிழ் நாட்டில் இருந்த சேரசோழ பாண்டியர் என்னும் மூன்று மன்னர்களைப்பற்றியும் மூன்று நாடுகளைப்பற்றியும் அவர் விருப்பு வெறுப்பு இல்லாமல் பாடியிருக்கிறார். அந்தக் காலத்துத் தமிழ் நாட்டில் கலையும் தொழிலும், இசையும் இயலும் கூத்தும் விளையாட்டும் நாகரிகமும் பண்பாடும் எப்படி வளர்ந்தன என்பதை அவர் நூலில் நன்றாகக் காணலாம். அதில் இயல், இசை, நாடகம் என்ற மூன்று வகையான தமிழும் இருப்பதனால் அதை முத்தமிழ்க் காப்பியம் என்று சொல்வார்கள். கண்ணகியினுடைய பெருமையை அது மிக நன்றாக எடுத்துச் சொல்கிறது.

இளங்கோவடிகள், மண்ணை ஆளும் அரசைத் துறந்தாலும் ஞானச் செல்வத்தை ஈட்டினார் புவியரசராக வாழாவிட்டாலும் கவியரசராக வாழ்ந்தார். அதைவிடப் பெருமை வேறு ஒன்று உண்டா!

# சீத்தலைச் சாத்தனார்

சேரன் செங்குட்டுவன் மலைவளம் காணுவதற்காகப் போயிருந்தான். அங்கே வாழ்ந்த மலைவாணர்களாகிய வேடர்கள் மான் கொம்பு, கவரிமானின் வால் முதலிய காணிக்கைகளோடு மன்னனை வந்து பார்த்தார்கள். அப்போது அவர்கள் தாம் கண்ட அதிசயம் ஒன்றை அரசனுக்கு எடுத்துச் சொன்னார்கள். "அரசே, ஒரு பெண் தன் கணவனை இழந்து வந்து, இந்த மலையின் மேல் ஏறி, ஒரு வேங்கை மரத்தின் அடியில் நின்றுகொண்டிருந்தாள். அப்போது வானவர்கள் விமானத்தில் அவள் கணவனோடு வந்து, அவளை அழைத்துக்கொண்டு சென்றதைக் கண்டோம்!" என்றார்கள். அதைக் கேட்டபோது அங்கே இருந்த சீத்தலைச் சாத்தனார், "எனக்கு அந்தப் பெண்ணைப் பற்றிய செய்திகள் தெரியும்" என்று சொன்னார். அப்போது



அங்கே செங்குட்டுவனுடைய மனைவியும் அவன் தம்பியாகிய இளங்கோவடிகளும் இருந்தார்கள்.

சித்தலைச் சாத்தனார், "கண்ணகியை, மதுரை நகருக்குக் காவல் தெய்வமாகிய மதுராபதி, இரவிலே கண்டு பேசியதை நான் கேட்டேன். மதுரைக் கோயிலில் நான் படுத்துக்கொண்டிருந்த பொழுது இது நிகழ்ந்தது" என்று சொல்லி, கண்ணகியின் கணவன் கோவலன் கொலையுண்டதையும் பத்தினியாகிய கண்ணகி மதுரையை எரித்ததையும் எடுத்துச் சொன்னார். கண்ணகியின் வரலாற்றைக் கேட்டு, யாவரும் வியப்பில் ஆழ்ந்தார்கள்.

அவள் கதையைக் காவியமாகச் செய்தால் நன்றாக இருக்கும் என்று சாத்தனார் எண்ணினார். 'இளங்கோவடிகளும் புலமையுடையவராதலின் மரியாதைக்காக அவரையே அந்தக் காவியத்தைப் பாடும்படி சொல்லலாம். அவர் எங்கே ஏற்றுக்கொள்ளப் போகிறார்? நம்மையே பாடும்படி சொல்வார்' என்று எண்ணி, "இந்தப் பத்தினித் தெய்வத்தின் கதையை அடிகளாகிய நீங்களே பாடியருள வேண்டும்" என்றார். துறவி இந்தக் கதையில் ஈடுபட மாட்டார் என்றும் நினைத்தார். ஆனால் இளங்கோவடிகள் மனத்தைக் கண்ணகியின் கதை உருக்கிவிட்டது. சாத்தனார் சொன்னவுடன், "அப்படியே செய்கிறேன்" என்று ஒப்புக்கொண்டு விட்டார்.

கண்ணகியின் கதையைக் காவியமாகப் பாடவேண்டும் என்ற ஆர்வத்தோடு இருந்தவர் சாத்தனார். இப்போது அதற்கு இடம் இல்லாமற் போயிற்று. ஆனாலும் ஏதாவது ஒரு காவியத்தை இயற்றாமல் இருப்பதில்லை என்ற வேகம் அவருக்கு உண்டாயிற்று. கண்ணகியின் கதையைப் பாட முடியாவிட்டாலும் கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலையின் கதையையாவது பாடலாம் என்ற ஊக்கம் பிறந்தது. விரைவிலே அதைப் பாடி முடித்துவிட்டார். இந்த இரண்டு காவியங்களும் சேர்ந்தே தமிழ் நாட்டில் உலவலாயின. பிற்காலத்தில் ஐம்பெருங் காப்பியங்கள் என்று ஒரு வரிசையைப் புலவர்கள் பாராட்டிச் சொல்வார்கள். அந்த ஐந்தில் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் முதலில் நிற்கின்றன.

சாத்தனாருக்குச் சித்தலைச் சாத்தனார் என்று பெயர் வந்ததற்கு ஒரு காரணம் உண்டு. நல்ல கவிதையைக் கண்டால் அவர் மிகவும் விருப்பத்தோடு படிப்பார். தவறான கவிதைகளையும்

சுவையற்ற கவிதைகளையும் கண்டால் அவருக்குப் பிடிப்பதில்லை. கவி பாடியவர்களைக் கண்டு பிடித்து வைய முடியுமா? 'இந்தக் கவியைப் படிக்கும்படி நேர்ந்ததே' என்று தம் தலையில் குட்டிக் கொள்வார். ஒரு சமயம் ஏதோ ஒரு நூலைப் படித்தார். அது மட்டமான கவிகள் அடங்கியது.

அதைப் படிக்கவே சகிக்கவில்லை. வழக்கம் போலத் தலையிலே குட்டிக் கொள்ளப் போனார். அப்போது அவர் கையில் எழுத்தாணி இருந்தது. அந்த நினைவே இல்லாமல் அவர் குட்டிக் கொண்டபோது எழுத்தாணி தலையில் குத்திவிட்டது. ஆழமாகக் குத்தி ரத்தம் பீரிட்டது. புண் உண்டாயிற்று. பிறகு அது சீழ்ப் பிடித்து ஆறுவதற்குப் பல நாட்கள் ஆயின.

அவர் தலையில் கட்டு கட்டிக்கொண் டிருந்ததைக் கண்ட நண்பர்கள், "என்ன புலவரே, கட்டு?" என்று கேட்டார்கள்.

"புண்; சீழ் கட்டியிருக்கிறது."

"என்ன புண்?"

'சுவையற்ற கவிதையைக் கண்டு, குத்திக் கொண்டதனால் வந்த வினை!"

"ஐயோ பாவம்! நீங்கள் சீத்தலைச் சாத்தனார் ஆனது தெரிந்தால், மட்டமான கவிகளை இனிமேல் யாரும் எழுத மாட்டார்கள். எழுதினாலும் உங்களிடம் காட்டமாட்டார்கள்" என்று அவர்கள் சொன்னார்கள்.

அது முதல் அவரைச் சீத்தலைச் சாத்தனார் என்றே யாவரும் அழைக்கத் தொடங்கினார்கள்.

முற்றும்